விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 191 வள்ளுவர் ஆண்டு 2056 ஆனி 14 சனிக்கிழமை (28.06.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




## மேலும் இரண்டு எலும்புக்கூட்டுத் தொகுதிகள் செம்மணியில் நேற்று அடையாளம்



(யாழ்ப்பாணம்)
செம்மணி மனிதப் புதைகுழியில் நேற்று வெள்ளிக்கிழமை மேலும் இரண்டு மனித எலும்புக்கூட்டு தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.
செம்மணி மனிதப் புதைகுழியில் இரண்டாம் கட்ட அகழ்வு பணியின் இரண்டாம் நாள் பணிகள்நேற்று வெள்ளிக்கிழமை 04ஆம் பக்கம் பார்க்க

## ராஜித சேனாரத்னவை கைது செய்யத் திட்டம்?

(கொழும்பு)
முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன இலஞ்ச வழக்கில் சந்தேக நபராகப் பெயரிடப்பட்டு கைது செய்யப் படவுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.
ஊழல் குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட மீன்பிடித் துறைமுகக் கூட்டுத்தாபனத்தின் முன்னாள் தலைவர் உபாலி லியனகே நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டபோது, இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழு அதிகாரிகள் இவ்வாறு 02ஆம் பக்கம் பார்க்க

## வவுனியா வடக்கு தமிழரசுக் கட்சி வசம்
### தவிசாளரானார் திருநாவுக்கரசு கிருஸ்ணவேணி



(வவுனியா)
வவுனியா வடக்குபிரதேச சபையை இலங்கைத் தமிழரசுக் கட்சி கைப்பற்றியதோடு அதன் தவிசாளராக திருநாவுக்கரசு கிருஸ்ணவேணி தெரிவு செய்யப்பட் 15ஆம் பக்கம் பார்க்க

## வவுனியா தெற்கில் தமிழரசுக் கட்சி ஆட்சி
### தவிசாளராக பா.பாலேந்திரன் தெரிவு



(வவுனியா)
வவுனியா தெற்குப் பிரதேச சபையை இலங்கைத் தமிழரசுக் கட்சி கைப்பற்றியதோடு அதன் தவிசாளராக பாலகிருஸ்ணன் பாலேந்திரன் 15ஆம் பக்கம் பார்க்க

# யாழ். மாநகர சபையில் நேற்று பெரும் அமளி
## முதல்வரை வெளியேறவிடாது முரண்பாடு

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாண மாநகர சபையின்நியதிக் குழுக்களுக்கு உறுப்பினர்களை நியமிப்பதில் ஒரு மித்த கருத்தின்மையால், நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்ற விசேட அமர்வில் குழப்பம் ஏற்பட்டது.
(02 ஆம் பக்கம் பார்க்க)



## வடக்கில் காணிகளை சுவீகரிக்கும் வர்த்தமானி இடைநிறுத்தம்
### உயர் நீதிமன்றம் உத்தரவு

(கொழும்பு)
வடக்கில் காணிகளைச் சுவீகரிக்கும் வர்த்தமானியை இடைநிறுத்த உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.
காணி நிர்ணய சட்டம் பிரிவு 4க்கு அமைவாக வடக்கில் காணிகளை சுவீகரிக்கும் 28.03.2025 திகதியிடப்பட்ட 2430/25 இலக்கமிடப்பட்ட வர்த்தமானியை இடைநிறுத்தி உயர் நீதி மன்றம் இடைக்கால உத்தரவை பிறப்பித்துள்ளது. 04ஆம் பக்கம் பார்க்க

## பலாலி இராஜராஜேஸ்வரி ஆலயத்தை 35 ஆண்டுகளின் பின் சுதந்திரமாக வழிபட இராணுவம் அனுமதி

(யாழ்ப்பாணம்)
பலாலி இராஜராஜேஸ்வரி அம்மன் ஆலயத்துக்குச் சுதந்திரமாகச் சென்று வழிபடுவதற்கு நேற்று வெள்ளிக்கிழமை முதல் இராணுவத்தினர் அனுமதித்துள்ளனர்.
உள்நாட்டு யுத்தம் 04ஆம் பக்கம் பார்க்க



## எதிர்வரும் செவ்வாய்க்கிழமை தனியார் போக்குவரத்துச் சேவை வடக்கில் சேவை முடக்கம்

(யாழ்ப்பாணம்)
வடக்கு மாகாணத்தில் எதிர்வரும் செவ்வாய்கிழமை சேவை முடக்கத்தில் ஈடுபட தனியார் போக்குவரத்து சேவை சங்கம் தீர்மானித்துள்ளது.
இலங்கை போக்குவரத்து சபையின், வடக்கு மாகாண சாலைகளில் நடைபெறும் சட்டவிரோத அத்துமீறிய செயற்பாடுகளைக் கண்டித்து, இந்தச் செயற்பாடு 15ஆம் பக்கம் பார்க்க

## போதை மாத்திரைகளுடன் சுன்னாகத்தில் இளைஞன் கைது

(யாழ்ப்பாணம்)
சுன்னாகம், சபாபதிப் பிள்ளை வீதியில் போதை மாத்திரைகளுடன் சந்தேக நபர் ஒருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார். 15ஆம் பக்கம் பார்க்க

## ஊர்காவற்றுறையில் மோட்டார் சைக்கிளிலிருந்து தவறிவிழுந்த பெண் மரணம்

(ஊர்காவற்றுறை)
யாழ்ப்பாணம் ஊர்காவற்றுறையில் மோட்டார் சைக்கிளிலிருந்து தவறிவிழுந்த குடும்பப் பெண் ஒருவர் நேற்று மரணமடைந்துள்ளார்.
இதில் யாழ்ப்பாணம் ஈச்ச மோட்டடையைச் சேர்ந்த ஜீவராசா மேரி தெரசா (வயது-52) என்ற நான்கு பிள்ளைகளின் தாயே உயிரிழந்தவராவார்.
குறித்த பெண் கடந்த 19 ஆம் திகதி ஊர்காவற்றுறை 15ஆம் பக்கம் பார்க்க

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## லொத்தர் விற்பனையாளர் தேவை

தேசிய அபிவிருத்தி லொத்தர் ரிக்கட்கள் விற்பனை செய்ய கொக்குவில், இணுவில், திருநெல்வேலி, கல்வியங்காடு ஆகிய இடங்களிற்கு விற்பனையாளர் தேவை.

தொடர்புகளுக்கு :

**077 122 8841**

(4657)



## கிழவன்காடு கலாமன்றம்

**காரைநகர் - யாழ். கிளை**

அறநெறிப் பாடசாலை நடாத்தும்

**மாணிக்கவாசகர் குருபூசை நிகழ்வு**

இடம் : கிழவன்காடு கலாமன்ற மனோன்மணி கலையரங்கு, காரைநகர்.

காலம் : 29.06.2025 ஞாயிற்றுக்கிழமை பி.ப 3.00 மணி

"மூதறிஞர்" "கலாநிதி"

"வைத்தீசுவரக்குருக்கள் அரங்கு"

**நிகழ்வுகள்**

◆ சொற்பொழிவு :- திரு. பரா. ரமேஸ் அவர்கள் (நிர்வாக உறுப்பினர், அகில இலங்கை இளங்கோ கழகம்)
தலைப்பு :- "அவன் அருளாலே"

◆ திருவாசகத் தேனிசை :- ஈழத்துப் பண்ணிசைக் கலைஞர்கள்

◆ கலாமன்ற அறநெறிப் பாடசாலையினால் நடாத்தப்பட்ட பேச்சுப் போட்டியில் வெற்றி பெற்று பதக்கம் பெறும் மாணவர்களின் பேச்சு

**சிறப்பு நிகழ்ச்சி**

◆ வில்லிசை :- "கலைமாமணி" "டாக்டர் S.S. குருஜீ தலைமையில்" ஈழ நல்லூர் ஸ்ரீதேவி வில்லிசை குழுவினர் வழங்கும் "பட்டினத்தார்"

◆ பரிசில், சான்றிதழ் வழங்கல்
"மூதறிஞர்" "கலாநிதி" வைத்தீசுவரக்குருக்கள் ஞாபகார்த்தமாக நடைபெற்ற திருவாசக மனனம் மற்றும் பேச்சுப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பதக்கம், பரிசில், சான்றிதழ் வழங்கல்.

குறிப்பு : நிகழ்விற்கான இலவச போக்குவரத்து சேவை கலாமன்ற யாழ். கிளையிலிருந்து பி.ப 2.30 மணிக்கு ஆரம்பமாகும். (இல.428, K.K.S வீதி, யாழ்ப்பாணம். யாழ் வண்ணை சிவன் கோயில் அருகாமை)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

கிழவன்காடு கலாமன்றம்

காரைநகர் - யாழ்ப்பாணம் (C-3275)


## யாழ்.மாநகர...

கடந்த 23ஆம் திகதி நடைபெற்ற முதலாவது அமர்வின் தொடர்ச்சியாக, நேற்று முதல்வர் மதிவதனி தலைமையில் விசேட அமர்வு ஆரம்பமானது.

கடந்த வாரம் சுகாதாரக் குழு உறுப்பினர் தேர்வில் ஏற்பட்ட குழப்பத்தால் அமர்வு ஒத்திவைக்கப்பட்டிருந்த நிலையில், நேற்று அது தொடர்ந்து நடைபெற்றது.

அமர்வில், சுகாதாரக் குழு உள்ளிட்ட பல குழுக்களுக்கு உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டனர். உறுப்பினர் தேர்வு முடிந்தவுடன் முதல்வர் கூட்டத்தை முடித்துக் கொள்வதாக அறிவித்து சபையிலிருந்து வெளியேறினார்.

இந்நிலையில், உறுப்பினர் தர்சானந், கடந்த 23ஆம் திகதி அமர்வில் சுகாதாரக் குழு தேர்வில் ஏற்பட்ட கருத்து வேறுபாடு குறித்து எதிர்ப்பு தெரிவித்தார்.

முதல்வர் ஏற்கனவே குழப்பத்தை ஏற்படுத்திய அதே தேர்வுகளை ஏற்றுக்கொண்டது நியாயமற்றது எனவும் தமது கருத்துகளை வெளியிட சபையில் வாய்ப்பு வழங்கப்பட வேண்டும் எனவும் கோரினார்.

கூட்டத்தை முடிவுக்குக் கொண்டுவராமல் தொடர வேண்டும் எனக் கோரிக்கை முன் வைத்தார்.

முதல்வர் வெளியேறியதால், தமது எதிர்ப்பைப் பதிவு செய்ய வாய்ப்பு கிடைக்கவில்லை எனத் தர்சானந் குறிப்பிட்டார். மேலும், சபையில் வெளி நபர்களின் ஆதிக்கம் வலுவாக உள்ளதாகவும், இது சபையின் நன்மைக்கு உகந்ததல்ல எனவும் சுட்டிக்காட்டினார். (ம-7,33,104)

## செந்தமிழ் விழா

(இணுவில்)

செந்தமிழ் விழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் இணுவில் அறிவாலயத்தின் கலாநிதி ஆறுதிருமுருகன் அரங்கில் இடம் பெறும்.

பேராசிரியர் க.தேவராசா தலைமையில் இடம்பெறும் இந் நிகழ்வில் ஸ்ரீராஜசேகரா அவர்களின் "திருஇடமொழி செந்தமிழ்" என்ற நூல் வெளியிடப்படும். (ந)

## ராஜித...

தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் விடயத்திற்கு பொறுப்பான அப்போதைய அமைச்சர் ராஜித சேனாரத்னவை குறித்த வழக்கில் சந்தேக நபராகப் பெயரிட்டு கைது செய்யவிருப்பதாக அவர் இதன்போது கூறினார்.

ஊழல் குற்றச்சாட்டில் இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழுவால் கைது செய்யப்பட்ட மீன்பிடித் துறைமுகக் கூட்டுத்தாபனத்தின் முன்னாள் தலைவர் உபாலி லியனகே, நேற்று கொழும்பு பிரதான நீதவான் தனுஜா லக்மாலி ஜயதுங்க முன் ஆஜர்படுத்தப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டார். (ம-7)


## வேலையாட்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கிவரும் பிரபல ஸ்ரூடியோ மற்றும் கலர்லாப் என்பவற்றிற்கு போட்டோகிறாப்பர், கிராபிக் டிசைனர், பிறின்ரர் போன்ற வேலைகளிற்கு பணியாளர்கள் தேவைப்படுகிறார்கள்.
இப் பணியிடங்களுக்கு ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

**077 234 9933**
**077 773 0567**

(C-3282)




## சமையலாளர் தேவை

யாழ். உரும்பிராயில் உள்ள உணவகம் ஒன்றுக்கு காலை, மதிய உணவுகள் செய்யத் தெரிந்த சமையலாளர் உடனடியாகத் தேவை.

**076 314 4689**

(4658)


# 1ம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 27 . 04 . 1947

உதிர்வு 08 . 07 . 2024

## அமரர் சின்னப்பொடியன் இராசதுரை
(வர்த்தகர்)

திதி : 28.06.2025

கண்முன்னே வாழ்ந்தகாலம்
கனவாகிப் போனாலும்
எம்முன்னே உங்கள் முகம்
எந்நாளும் உயிர்வாழும்
மண்விட்டு மறைந்த நீங்கள்
விண்ணோக்கிச் சென்றாலும்
கண்விட்டு மறையாமல்
கனகாலம் இருப்பீர்கள்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

சர்வோதய வீதி,
ஆவரங்கால் மேற்கு.

குடும்பத்தினர் (C-3284)

# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 29.05.2025 வியாழக்கிழமை
அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

## அமரர் கந்தையா தம்பையா புவனேந்திரன்

அவர்களின் 31 ஆம் நாள் அந்தியேட்டிக் கிரியைகள்

இன்று (28.06.2025) சனிக்கிழமை காலை 5.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்று அஸ்தி கரைக்கப்படும். பின்னர் அன்னாரது இல்லத்தில் பகல் 11.30 மணியளவில் சபிண்டீகரண கிரியைகள் நடைபெறும். அதனைத் தொடர்ந்து நாளை (29.06.2025) ஞாயிற்றுக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறும் மதிய போசன நிகழ்வில் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இவ் அழைப்பினை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தரவும் (C-3285)

முதலியார் வளவு, வதிரி,

தகவல் : குடும்பத்தினர்
077 247 9240

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூக ஊடகங்கள் மூலம் அதிகரிக்கும் குற்றங்கள்

## பொலிஸார் எச்சரிக்கை

(கொழும்பு)

**சமூக ஊடகங்களில் பரவும் போலி விளம்பரங்கள் குறித்து மிகவும் எச்சரிக்கையாக இருக்குமாறு பொலிஸார் பொதுமக்களிடம் தெரிவித்துள்ளனர்.**

வீட்டிலிருந்து சம்பாதிக்க முடியும் என கூறி Facebook, Whatsapp, Telegram, Skype, We Chat போன்ற சமூக ஊடகங்கள் ஊடாக பகிரப்படும் போலி விளம்பரங்கள் குறித்து மிகவும் எச்சரிக்கையாக இருக்குமாறு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

விளம்பரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வங்கி கணக்குகளில் சிறிய பணத் தொகையை முதலீடு செய்தால் அதன் ஊடாக இலாபம் பெறலாம் என சமூக ஊடகங்களில் விளம்பரப்படுத்தி, சிறிய பணத்தொகையை முதலீடு செய்த நபர்களுக்கு பெருமளவிலான பணத்தை வழங்கி அதிகளவிலான இலாபத்தை பெற்றுக்கொடுத்து அவர்களின் நம்பிக்கையை வென்ற பின்னர் விளம்பரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வங்கி கணக்குகளில் பெரியளவிலான பணத் தொகையை முதலீடு செய்யுமாறு கூறி மோசடியில் ஈடுபடுகின்றனர்.

இதனை அறியாத மக்கள் சிறிய பணத்தொகையை முதலீடு செய்ததால் கிடைத்த அதிகளவிலான இலாபத்தை நம்பி பெரியளவிலான பணத் தொகையை முதலீடு செய்து ஏமாறுகின்றனர்.

விளம்பரத்தின் அடிப்படையில் வங்கி கணக்குகளில் பணத்தொகையை முதலீடு செய்த நபர்களின் பணத்தை வேறு வங்கி கணக்குகளுக்கு இலகுவாக பணப்பரிமாற்றம் செய்வதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அத்துடன் வீட்டிலிருந்து சம்பாதிக்க முடியும் எனக் கூறி விளம்பரங்களை பதிவிட்டு, அதனூடாக அறிமுகமான நபர்களின் வங்கி கணக்குகளை பெற்றுக்கொண்டு அதில் பணத்தை வைப்புச் செய்து அந்த பணத்தை விளம்பரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வங்கி கணக்கிற்கு பரிமாற்றம் செய்தால் பெரிய எவிலான பணத்தொகை இலாபமாக கிடைக்கும் எனக் கூறி மோசடியில் ஈடுபடுகின்றனர்.

இதன் ஊடாக கறுப்பு பணத்தை வெள்ளை பணமாக மாற்றும் நிதி மோசடிகள் இடம்பெறுகின்றன என பொலிஸார் தெரிவித்தனர்.

எனவே, சமூக ஊடகங்களில் பரவும் போலி விளம்பரங்கள் குறித்து மிகவும் எச்சரிக்கையாக இருக்குமாறு பொலிஸார் பொதுமக்களிடம் கேட்டுக்கொண்டுள்ளனர். (நி)

# நாமலுக்கு எதிரான வழக்கு ஒத்திவைப்பு

(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவுக்கு எதிராக சட்டமா அதிபரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கை எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 26 ஆம் திகதி மீண்டும் அழைக்குமாறு கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.

ரக்பி விளையாட்டை ஊக்குவிப்பதாக கூறி இந்திய நிறுவனமான கிரிஷ்டிமிருந்து 70 மில்லியன் ரூபாயைப் பெற்றுக்கொண்டு நம்பிக்கை மோசடி செய்ததாகக் கூறி நாமல் ராஜபக்ஷவுக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

வழக்கு அழைக்கப்பட்டபோது பிரதிவாதியான நாமல் ராஜபக்ஷ நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி)



# அகராதியில் இடம்பெற்ற இலங்கைச் சொற்கள்

(வோஷிங்டன்)

ஆக்ஸ்போர்ட் ஆங்கில அகராதி புதுப்பிப்பில் பல தனித்துவ மான இலங்கைச் சொற்களைச் சேர்த்துள்ளது.

குறிப்பாக கொத்துரொட்டி, கிரிபத் உள்ளிட்ட பல பிரபல மான இலங்கை வார்த்தைகள் ஆக்ஸ்போர்ட் அகராதியில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

இது தவிர, 'பைலா' மற்றும் 'பப்பரே' என்ற கலாசாரச் சொற்களும் சேர்க்கப்பட்டுள்ளன.

இது உலகளாவிய ஆங்கில பயன்பாட்டில் இலங்கை உணவு வகைகள் மற்றும் மரபுகளுக்கு குறிப்பிடத்தக்க அங்கீகாரத்தைக் குறிக்கிறது.

புதிய உள்ளீடுகளை அறிமுகப்படுத்துவதோடு மட்டுமல்லாமல், சமகால பயன்பாட்டை மிகவும் துல்லியமாக பிரதிபலிக்கும் வகையில் ஆக்ஸ் போர்ட் ஆங்கில அகராதி ஆசிரியர் குழு ஏற்கனவே உள்ள பல இலங்கை ஆங்கிலச் சொற்களையும் திருத்தியுள்ளது.

சிலோன் காபி, சிலோன் டீ, சிலோனீஸ், கொழும்பு, டகோபா, கங்கானி, சிங்களி, தமிழ், யுஎன்பி, வேத்தா, விஹாரா எனும் சொற்களை திருத்தியுள்ளது.

இந்த புதுப்பிப்பு உலகளாவிய மொழியியல் நிலப்பரப்புகளில் இலங்கை கலாசாரம் மற்றும் மொழியின் வளர்ந்து வரும் செல்வாக்கை எடுத்துக்காட்டுகிறது. (நி)


## வலிகாமம் மேற்கு பிரதேசசபை, சுழிபுரம்
## ஆதனப்பெயர் மாற்றம்
### 59, கோயில் வீதி, வட்டாரம்-01

வலிகாமம் மேற்கு பிரதேச சபை சங்கானை உப அலுலலகத்திற்குட்பட்ட வட்டாரம் 01. கோவில் வீதியிலுள்ள இல: 59 ஆகிய ஆதனம் எமது ஆதனவரிப்பதிவேட்டின் பிரகாரம் **சொந்தக்காரர்** என்றே காணப்படுகிறது.

பெயர் மாற்றத்திற்குட்படும் ஆதனத்தினை உள்ளடக்கிய முழு ஆதனத்தினையும் **முத்துத்தம்பி கந்தையா கைம்பெண் இராசம்மாவும், வேலுப்பிள்ளை நாகலிங்கமும் பெண் சிவஞானமும், துரைசாமி மகளும் செல்லத்துரை செல்வஜெயம் பெண் விஜயராணியும்** சொந்தக்காரர்களாக இருந்து சொரியலாக ஆட்சி செய்வது வசதியினமாகயிருந்தமையால் அவர்கள் பிரசித்த நொத்தாரிசு S.V.கனகரட்ணம் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 86/12.11.1978 ஆம் இலக்க உறுதியால் **பிரிவிடல்** செய்து தத்ததமது பகுதிகளுக்கு சொந்தமும் உரித்துமுடையவரானார்கள்.

**வேலுப்பிள்ளை மகேந்திரனும் பெண் கலாரஞ்சினியும் (சிவசம்பு மகள்)** ஆகியவர்கள் குறித்த ஆதனமானது தங்களில் 2 ஆம் பேரின் தாய் வழிப்பேத்தியான வேலுப்பிள்ளை நாகலிங்கம் பெண் சிவஞானம் என்றழைக்கப்படும் முத்தம்மாவுக்கு உரித்தானது என்றும், அவர் இவ்வாதனத்தை ஆண்டு அனுபவித்து 30 வருடங்களுக்கு முன்னதாக சிவசம்பு பெண் ஞானதேவி ஆகியவரின் சீவிய உரித்துக்கமைவாக மகேந்திரன் பெண் கலாரஞ்சினி ஆகிய தங்களில் 2 ஆம் பேருக்கு நன்கொடை உறுதி முடித்துக் கொடுத்தார் என்றும், குறித்த நன்கொடை உறுதி குறித்த சிவசம்பு பெண் ஞானதேவியிடம் இருந்ததென்றும், கடந்த கால வன்முறை இடம்பெயர்வின் போது அவ்வுறுதி கைதவறிவிட்டதென்றும். அவ்வுறுதியை நிறைவேற்றிய பிரசித்த நொத்தாரிசின் பெயரை சரியாக அறிந்திராத காரணத்தினால் அவ்வுறுதியின் பிரதியைப் பெற முடியவில்லை எனவும் எது எப்படியான போதிலும் கடந்த 15 வருடங்களுக்கு மேலாக குறித்த ஆதனம் தொடர்ச்சியாகவும், முறிவுமின்றி தமது ஆட்சியிலும், கட்டுப்பாட்டிலும் வைத்திருந்ததன் மூலம் தாம் இவ்வாதனத்திற்கு ஆட்சியுரித்து சட்டம் 3 ஆம் பிரிவின் கீழ் ஆட்சியுரித்துப் பெற்றுவிட்டோம் எனவும் வெளிப்படுத்தி பிரசித்த நொத்தாரிசு சி.வீரகத்திப்பிள்ளை முகதாவில் 12488/14.06.2012 ஆம் இலக்கத்தில் வெளிப்படுத்தல் உறுதியொன்றை நிறைவேற்றியிருந்தார்கள். குறித்த உறுதியில் அடி உறுதி பற்றிய விபரங்கள் எதுவும் குறிப்பிடப்படாது குறித்த உறுதியானது நிறைவேற்றப்பட்டுள்ளது.

**சின்னையா மகேந்திரலிங்கமும் பெண் இராசலட்சுமியும்** ஆகியவர்கள் பிரசித்த நொத்தாரிசு இ.சபேசன் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 4927/01.07.2013 ஆம் இலக்க உறுதியால் குறித்த **வேலுப்பிள்ளை மகேந்திரனும் பெண் கலாரஞ்சினியும்** ஆகியவர்களிடமிருந்து மேற்படி ஆதனத்தினை அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்கள்.

குறித்த சின்னையா மகேந்திரலிங்கம் காலஞ்செல்ல குறித்த ஆதனம் அவரின் வாரிசுகளான மகேந்திரலிங்கம் டசியந்தனும், மகேந்திரலிங்கம் ஜெசியந்தனும், மகேந்திரலிங்கம் மகள் விதுஷாவும் ஆகியவர்களுக்கு முதுசமாகவும் மகேந்திரலிங்கம் கைம்பெண் இராசலட்சுமியும் ஆகியவரிற்கு தாரப்பங்காகவும் வந்தடைந்தது.

**வேலுப்பிள்ளை மகேந்திரனும் பெண் கலாறஞ்சினியும், மகேந்திரலிங்கம் கைம்பெண் இராசலட்சுமியும், மகேந்திரலிங்கம் டசியந்தனும், மகேந்திரலிங்கம் ஜெசியந்தனும், மகேந்திரலிங்கம் மகள் விதுஷாவும்** ஆகியவர்கள் குறித்த ஆதனத்தினை குறித்த 12488/14.06.2012 ஆம் இலக்க உறுதியால் வெளிப்படுத்திய வேளை குறித்த ஆதனம் வேலுப்பிள்ளை நாகலிங்கம் பெண் சிவஞானம் என்பவர்களின் பேரில் இருந்தது என்றும், அப்போது இருந்த சூழ்நிலையில் வேலுப்பிள்ளை நாகலிங்கம் பெண் சிவஞானம் என்பவர்களின் பேரிலுள்ள உறுதி தொலைந்து விட்டதென்றும், ஆனால் வேலுப்பிள்ளை நாகலிங்கம் பெண் சிவஞானம் ஆகியோருக்குரித்தான ஆதனம் 12.11.1978 ஆம் திகதி பிரசித்த நொத்தாரிசு சிராணி வனோலி கனகரட்ணம் முகதாவில் 86 ஆம் இலக்கத்தில் நிறைவேறிய பிரிவிடல் உறுதியில் 3 ஆம் ஆதனமாகக் குறிப்பிடப்பட்டுள்ள விடயம் தற்போதே தங்களால் கண்டறியப்பட்டதென்றும், குறித்த 12488 ஆம் இலக்கத்தில் நிறைவேறிய வெளிப்படுத்தல் சாதனமும், 12.11.1978 ஆம் திகதி பிரசித்த நொத்தாரிசு சிராணி வனோலி கனகரட்ணம் முகதாவில் 86 ஆம் இலக்கத்தில் நிறைவேற்றப்பட்ட பிரிவிடல் சாதனமும் ஒரே ஆதனத்தினையே குறிக்கின்றது எனவும், குறித்த வேலுப்பிள்ளை நாகலிங்கம் பெண் சிவஞானம் ஆகியோர் மரணசாசன நிர்வாகப்பத்திரம் பெறுவதற்கு குறைவான சொத்துக்களை விட்டு இறந்த நிலையில், அவர்களின் ஒரேயொரு வாரிசான குறித்த வேலுப்பிள்ளை மகேந்திரன் பெண் கலாறஞ்சினியை சொந்தமாக வந்தடைந்ததெனவும் வெளிப்படுத்தி பிரசித்த நொத்தாரிசு வைரமுத்து சுபாஸ்கரன் முகதாவில் 548/07.11.2021 ஆம் இலக்கத்தில் வெளிப்படுத்தல் உறுதியொன்றை நிறைவேற்றியிருந்தார்கள்.

குறித்த **மகேந்திரலிங்கம் கைம்பெண் இராசலட்சுமி** ஆகியவர் ஆதனப் பெயர் மாற்றத்திற்கு விண்ணப்பித்துள்ளார்.

இவ் ஆதனப்பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பர்கள் யாராவது இருப்பின் **உரிய ஆவணங்களுடன் 30 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும்** அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது **மகேந்திரலிங்கம் கைம்பெண் இராசலட்சுமி** ஆகியவருக்கு பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர் மாற்றத்தால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் மேற்கு பிரதேசசபை பொறுப்பாளியல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**செயலாளர்,**
**வலிகாமம் மேற்கு பிரதேசசபை.**

(4653)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டெஸ்ட் தொடரிலிருந்து பும்ரா விலகல் இந்திய அணிக்கு விழுந்த பேரிடி




இந்திய கிரிக்கெட் அணி இங்கிலாந்தில் சுற்றுப் பயணம் மேற்கொண்டு 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. இதில் இவ்விரு அணிகள் இடையிலான முதலாவது டெஸ்ட் போட்டி லீட்சில் நடைபெற்றது. இந்தப் போட்டியில் இங்கிலாந்து 5 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் இந்தியாவை வீழ்த்தி தொடரை வெற்றியுடன் தொடங்கி உள்ளது. இதன் மூலம் 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் இந்திய அணி 0-1 என்ற கணக்கில் பின் தங்கி உள்ளது.


இதனையடுத்து இவ்விரு அணிகள் இடையிலான 2 ஆவது போட்டி ஜூலை 2 ஆம் திகதி பர்மிங்காமில் நடைபெறவுள்ளது. இந்தப் போட்டியில் வெற்றி பெற இந்திய அணி தீவிர பயிற்சியை மேற்கொண்டு வருகிறது.

இந்நிலையில் இந்தப் போட்டியில் இந்திய அணியின் முன்னணி வேகப் பந்து வீச்சாளரான ஜஸ்பிரித் பும்ராவுக்கு ஓய்வு அளிக்க முடிவு செய்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. பணிச்சுமை காரணமாக அவர் இந்த தொடரில் 3 போட்டிகளில் மட்டுமே விளையாடுவார் என்று ஏற்கனவே கூறப்பட்டுள்ளது.

அதன்படி இந்த 2 ஆவது போட்டியில் அவருக்கு ஓய்வு அளிக்கப்படவுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. ஏற்கனவே தோல்வியால் துவண்டு போயுள்ள இந்திய அணிக்கு இது பலத்த பின்னடைவாக கருதப்படுகிறது. முதல் டெஸ்ட் போட்டியின் முதல் இன்னிங்சில் பும்ரா 5 விக்கெட்டுகள் வீழ்த்தியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# அல் - நசீர் அணியுடனான ஒப்பந்தம் நீடிப்பு

## அறிவித்தார் ரொனால்டோ




உலகக் கால்பந்து ஜாம்பவான் என்றழைக்கப்படும் போர்த்துக்கல் நட்சத்திர வீரரான கிறிஸ்டியானோ ரொனால்டோ, சவுதி லீக்கில் அல்-நசீர் அணியின் ஒப்பந்தத்தை மேலும் 2 ஆண்டுகள் நீடிப்பதாக அறிவித்துள்ளார்.

இதுகுறித்து, அவர் தனது எக்ஸ் பக்கத்தில், ஒரு புதிய அத்தியாயம் தொடங்குகிறது. அதே ஆர்வம், அதே கனவு. ஒன்றாக இணைந்து வரலாற்றை உருவாக்குவோம் என்று பதிவிட்டுள்ளார்.

இதன் மூலம், அவரின் முந்தைய சாதனைகளை அவரே முறியடிக்கவுள்ளார்.

கடந்த மாதம், சவுதி சீசனின் முடிவில் அத்தியாயம் முடிவடைந்ததாக ரொனால்டோ கூறியிருந்த நிலையில், தற்போது புதிய அத்தியாயம் குறித்து அறிவித்துள்ளார்.

2027 வரையில் அல்-நசீர் அணிக்கு ஒப்பந்தம் நீடிக்கப்பட்டுள்ள அவருக்கு ஓராண்டுக்கு 200 மில்லியன் டொலர் வரையில் வழங்கப்படுகிறது.

கடந்தாண்டில் மட்டும் மொத்தமாக 275 மில்லியன் டொலர்கள் ரொனால்டோ சம்பாதித்ததாக ஃபோர்ப்ஸ் அறிக்கை கூறுகிறது.(3)

# சர்வதேச டெஸ்ட் கிரிக்கெட்டில் புதிய விதிமுறை அமுல்

சர்வதேச டெஸ்ட் கிரிக்கெட்டில் புதிய விதிமுறையை ஐ.சி.சி. அமுல்படுத்தியுள்ளது. 2025-2027ஆம் ஆண்டுக்கான 4 ஆவது உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடர் சமீபத்தில் ஆரம்பமாகியது. இதிலிருந்து இந்த புதிய விதிமுறை அமுலுக்கு வந்துள்ளது.

அதன்படி சர்வதேச வெள்ளைப்பந்து கிரிக்கெட் போட்டிகளில் (ஒருநாள் மற்றும் ரி20) உள்ளது போல டெஸ்டிலும் பந்து விச்சு அணிக்கான நேரக்கட்டுப்பாட்டை ஐ.சி.சி.அறிமுகப்படுத்தியுள்ளது.

அதன்படி, ஒரு ஓவர் நிறைவடைந்த 60 நொடிகளுக்குள் அடுத்த ஓவரை தொடங்க வேண்டும். இல்லையெனில் இருமுறை எச்சரிக்கை விடப்படும். 3ஆவது முறை தாமதம் செய்தால் துடுப்பாட்ட அணிக்கு 5 புள்ளிகள் வழங்கப்படும்.

இந்த விதிமுறை தற்போது டெஸ்ட் கிரிக்கெட்டுக்கும் கொண்டுவரப்பட்டுள்ளது. நேரத்தை கணக்கிட மின்னனு கடிகாரம் மைதானத்திலேயே வீரர்களின் பார்வையில் படும் படி வைக்கப்பட்டிருக்கும். (3)

ஸ்ரீவல்லிபுரேசன் துணை

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



வையகம் 17 . 06 . 1948

வைகுண்டம் 09 . 07 . 2024

ஜாமதக்கினி கோத்திரம்
அமரர்
**பிரம்மஸ்ரீ கணபதிசாமிக்குரு சுதர்சனக்குரு**
**(பிரதம குரு, ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோவில்)**

சுதர்சனமாய் சுதர்ஷனத்திற்கு
வையகத்திலாற்றிய கருமம் போதுமென்று
வைகுண்டப் பதவி வழங்கவென – தங்களை
ஆழ்கடலோன் அரவணைத்து
ஆண்டொன்று ஆனபோதும்
ஆறவில்லை எங்கள் மனம்
ஆறாது அது ஆறாது
தீராது சொல்லித் தீராது.

சிவன்கோவிலடி,
ஆவரங்கால்.
(C-3286)
குடும்பத்தினர்

## மேலும் இரண்டு ...

முன்னெடுக்கப்பட்டது.

நேற்றைய அகழ்வுப் பணிகளின் போது இரண்டு மனித எலும்புக் கூட்டு எச்சங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

இரண்டாம் கட்ட அகழ்வு பணிகளுக்காக, 45 நாட்கள் அனுமதி கிடைக்கப்பெற்றுள்ள நிலையில் 15 நாட்கள் தொடர்ச்சியாக அகழ்வு பணிகள் நடைபெற்று பின்னர் சிறு கால இடைவெளியின் பின்னரே பணிகள் ஆரம்பிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7,33)

## வடக்கில் ...

ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் தாக்கல் செய்த மனு நேற்று வெள்ளிக்கிழமை (27) விசாரிக்கப்பட்ட பின்னர் குறித்த வர்த்தமானியைத் தற்காலிகமாக வலிதற்றதாக்கும் வகையில் இந்தத் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அடுத்த வழக்கு விசாரணை எதிர்வரும் ஜூலை மாதம் 02 ஆம் திகதி இடம்பெறவுள்ள நிலையில் அதற்கிடையில் குறித்த வர்த்தமானியை மீள பெறுவதற்கான வர்த்தமானியை அரசாங்கம் வெளியிட்டால் அதனை சமர்ப்பிக்க வேண்டும் என்று உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.(ம-7)

## 35 ஆண்டு ...

காரணமாக கடந்த 1990ஆம் ஆண்டு ஜூன் மாதம் 15ஆம் திகதி பலாலியில் இருந்து மக்கள் வெளியேறி இருந்தனர். அதனைத் தொடர்ந்து அப்பகுதி இராணுவ உயர் பாதுகாப்பு வலயமாகக் காணப்பட்டது.

கடந்த 35 வருட காலமாக உயர் பாதுகாப்பு வலயத்தினுள் உள்ள ஆலயத்திற்கு (தற்போதும் ஆலயத்திற்கு மட்டும் செல்லவே அனுமதி) கடந்த 06 மாத காலத்திற்கு முதலே சுதந்திரமாகச் சென்று வழிபட அனுமதி வழங்கப்படும் என இராணுவத்தினர் அறிவித்திருந்த போதிலும் இதுவரை காலமும் கடுமையான கட்டுப்பாடுகளுடன் விசேட தினங்களில் மாத்திரம் ஆலயத்திற்கு செல்வதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், ஆலயத்திற்கு மாத்திரம் செல்வதற்கு என உயர் பாதுகாப்பு வலயத்தினுள் பிரத்தியேகப் பாதை அமைக்கப்பட்டு குறித்த பாதை ஊடாக நேற்றைய தினம் வெள்ளிக்கிழமை முதல் மக்கள் ஆலயத்திற்கு மாத்திரம் சென்று வழிபட்டு திரும்ப இராணுவத்தினர் அனுமதி வழங்கியுள்ளனர். (ம-7,33)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர்களை இணைப்பதற்கான புதிய சுற்றறிக்கை வெளியிட திட்டம்

## கல்வி அமைச்சு அறிவிப்பு

(கொழும்பு)

அடுத்தாண்டுக்கான முதலாம் தரத்திற்கு மாணவர்களை சேர்ப்பதற்கான திருத்தப்பட்ட சுற்றறிக்கை அடுத்த வாரம் வெளியிட திட்டமிடப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.


இதேவேளை இடைநிலை தரங்களுக்கு மாணவர்களை சேர்ப்பதற்கான திருத்தப்பட்ட சுற்றறிக்கை அடுத்த வாரம் வெளியிடப்படும் என்று பிரதி கல்வி அமைச்சர் மதுர செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

தற்போதுள்ள சுற்றறிக்கையில் உள்ள பல குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்காக புதிய சுற்றறிக்கை வெளியிடப்படுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதற்கமைய மிகவும் பொருத்தமான மாணவர்களை பாடசாலைகளில் சேர்க்கப்படுவதை உறுதி செய்யும் வகையில் புதிய சுற்றறிக்கை வெளியிடப்படும் என பிரதியமைச்சர் குறிப்பிட்டார்.

இதன்மூலம் சட்டவிரோதமான மற்றும் முறையற்ற முறைகள் மூலம் பாடசாலைகளில் மாணவர்களை சேர்க்கும் நடைமுறை முடிவுக்கு வரும் என பிரதியமைச்சர் மதுர செனவிரத்ன மேலும் தெரிவித்துள்ளார். (நி)

# உப்புக்கான அதிகபட்ச விலை நிர்ணயம்



(கொழும்பு)


நுகர்வோர் விவகார அதிகார சபையுடன் எட்டப்பட்ட ஒப்பந்தத்தின்படி, சந்தையில் உப்பு விலையைக் குறைக்கும் வகையில் அதிகபட்ச சில்லறை விலை வரம்புகளுக்கு உட்பட்டு உப்பு விநியோகிக்கப்படும் என்று இலங்கை உப்பு உற்பத்தியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

அரசாங்கம் சமீபத்தில் இறக்குமதி கட்டுப்பாடுகளைத் தளர்த்தியதால், போதுமான உப்பு இருப்புக்கள் கிடைத்துள்ளன.

எனவே, இறக்குமதி செய்யப்பட்ட பொதி செய்யப்பட்ட உப்புக்கான விலை பின்வரும் அதிகபட்ச சில்லறை விலை வரம்புகளுக்கு உட்பட்டு உடனடியாக விற்பனை தொடங்கப்பட்டுள்ளது என்று சங்கம் மேலும் தெரிவிக்கிறது.

இதன்படி 1 கிலோகிராம் கட்டி உப்பு ரூ. 180, 1 கிலோகிராம் தூள் உப்பு ரூ.240 ஆகிய விலைகளில் பெற்றுக் கொள்ளலாம். (நி)

# எதிர்க்கட்சிகளுடனான கூட்டிணைவு தற்காலிகமானது-பெரமுன சுட்டிக்காட்டு



(கொழும்பு)

உள்ளூராட்சிமன்ற அதிகார சபைகளில் ஆட்சியமைப்பதற்கு மாத்திரம்தான் எதிர்க் கட்சிகளுடன் பொதுவான கொள்கை அடிப்படையில் ஒன்றிணைந்துள்ளோம்.

இது தற்காலிக கூட்டிணைவே தவிர நிரந்தரமான கூட்டிணை வல்ல என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது.

நடைபெற்று முடிந்த உள்ளூராட்சிமன்றங்களில் எதிர்க் கட்சிகளின் ஒத்துழைப்புடன் இரண்டு உள்ளூராட்சிமன்றங்களின் அதிகாரங்களைக் கைப்பற்றியுள்ளோம்.

அதேபோல் பிரதான எதிர்க் கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சியமைப்பதற்கு கொள்கை அடிப்படையில் ஒத்துழைப்பு வழங்கியுள்ளோம்.

உள்ளூராட்சிமன்ற அதிகார சபைகளில் ஆட்சியமைப்பதற்கு மாத்திரம்தான் எதிர்க்கட்சிகளுடன் பொதுவான கொள்கை அடிப்படையில் ஒன்றிணைந்துள்ளோம்.

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் செயற்பாடுகள் மற்றும் கொள்கைகளில் ஒரு சில குறைபாடுகள் காணப்படுகின்றன.

மாறுப்பட்ட அரசியல் கொள்கையுடைய இரண்டு பிரதான அரசியல் கட்சிகள் நிலையான வகையில் கூட்டிணைய முடியாது என அவர் தெரிவித்தார். (நி)


## வலிகாமம் மேற்கு பிரதேசசபை, சுழிபுரம்
## ஆதனப்பெயர் மாற்றம்
### 75, பெரியதம்பிரான் கோயில் வீதி, வட்டாரம் - 02

வலிகாமம் மேற்கு பிரதேச சபை அராலி உப அலுவலகத்திற்குட்பட்ட வட்டாரம் 02. பெரியதம்பிரான் கோயில் வீதியிலுள்ள இல 75 ஆகிய ஆதனம் எமது ஆதனவரிப் பதிவேட்டின் பிரகாரம் **பசுபன் முருகன்** என்றே காணப்படுகிறது.

பெயர் மாற்றத்திற்குட்படும் முழு ஆதனத்தினை **மூத்தையா தங்கவேலுவும் பெண் யோகேஸ்வரியும்** ஆகியவர்கள் பிரசித்த நொத்தாரிசு V.மயில்வாகனம் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 4716/02.07.1988 ஆம் இலக்க உறுதியால் **கங்காதரன் சிதம்பரநாதரும் பெண் வரதாவும்** ஆகியவர்களிடமிருந்து அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்கள்.குறித்த உறுதி பதிவு செய்யப்பட்டிருப்பினும் இணைப்பிரதி காணிப்பதிவகத்தில் ஒப்படைக்கவில்லை என யாழ்ப்பாணம் காணிப்பதிவாளரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட கடிதம் வழங்கப்பட்டுள்ளது.

**மரியமக்கேல் கிருஷ்ணகுமார் பெண் சாந்தமதி** ஆகியவர் குறித்த ஆதனத்தில் ஒரு பகுதியினைப் பிரசித்த நொத்தாரிசு சிவலிங்கம் இளங்கீரன் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 7198/30.04.2017ஆம் இலக்க உறுதியால் குறித்த **மூத்தையா தங்கவேலுவும் பெண் யோகேஸ்வரியும்** ஆகியவர்களிடமிருந்து சீதனமாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

குறித்த **மரியமக்கேல் கிருஷ்ணகுமார் பெண் சாந்தமதி** ஆகியவர் ஆதனப் பெயர் மாற்றத்திற்கு விண்ணப்பித்துள்ளார்.

இவ் ஆதனப்பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபணை தெரிவிப்பர்கள் யாராவது இருப்பின் **உரிய ஆவணங்களுடன் 30 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும்** அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது **மரியமக்கேல் கிருஷ்ணகுமார் பெண் சாந்தமதி** ஆகியவருக்குப் பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர் மாற்றத்தால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் மேற்கு பிரதேசசபை பொறுப்பாளியல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**செயலாளர்,**
**வலிகாமம் மேற்கு பிரதேசசபை.**

(4637)



# இராசிபலன்

28.06.2025
ஆனி 14, சனிக்கிழமை
திருதியை பிற்பகல் 1.17 மணிவரை


பூசம் முற்பகல் 10.03 மணிவரை
சுபநேரம் 2.55-4.25 மணிவரை
இராகுகாலம் 8.55-10.25 மணிவரை

சந்திராஷ்டமம்- மூலம், பூராடம்

வளவன்





பொழுதுபோக்கு விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர், தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள்.





மற்றவர்கள் பாராட்டும் வகையிலான காரியங்களைச் செய்து முடிப்பீர்கள், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், நீண்ட நாளைய பிணக்குகளில் திசை திருப்பங்கள் ஏற்படலாம்.




உறவினர்கள் வழியில் சுப செய்திகள் வந்து சேரலாம், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், இனிமையான அனுபவங்கள் ஏற்படலாம், புதிய நட்புக்கள் இடம்பெறலாம், உற்சாகமான நாள்.





பயணங்களால் பலனுண்டு, சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், பெரிய மனிதர்களின் சந்திப்புக்கள் இடம்பெறும் வாய்ப்புண்டு, கனிவாகப் பேசி காரியம் சாதிக்கும் நாள்.





திடீரெனக் கேட்கும் செய்திகளால் திகைப்படையலாம், வெளியூர்த் தொடர்புகள் அதிகரிக்கும் நாள், சிந்தித்து செயற்பட்டு சிறப்புக்களைக் காணும் நாள்.




குடும்பத்தில் உங்களின் செல்வாக்கு மேலோங்கும் நாள், திடீர் பண வரவு மனதிற்கு மகிழ்ச்சி தரும், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், போசன சுகமுண்டு.





ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், எதிர்பார்த்த தன வரவுகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, அருமையான நாள், எடுத்த காரியங்களில் உற்சாகம் காட்டுவீர்கள்.





வியக்கும் செய்திகள் வீடு வந்து சேரலாம், வருமானம் எதிர்பார்த்தபடி வந்து சேரலாம், பயணங்களால் பலனுண்டு, ரோக பயமுண்டு.




திட்டமிட்ட பணிகளில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், பயணத்தால் மன உளைச்சல் ஏற்படலாம், வழிபாட்டால் சுகம் காண வேண்டிய நாள், ரோக பயமுண்டு.




குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும், மனதிற்கினிய சம்பவங்கள் இடம்பெறலாம், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், போசன சுகமுண்டு.




உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இனங்கண்டு கொள்வீர்கள், வாழ்க்கைத்தரம் உயர வழிவகை செய்யும் நாள், புதிய பொருட் சேர்க்கையுண்டு.




பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும், பூர்வீகச் சொத்து சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு, எடுத்த காரியங்களை முடிக்க அதிக பிரயாசை காட்ட வேண்டிய நாள்.

போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வடக்கு ஆளுநரைச் சந்தித்த யாழ்.மாவட்ட இராணுவ கட்டளைத் தளபதி



(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகனுக்கும் யாழ். மாவட்ட இராணுவக்கட்டளைத் தளபதியாகப் பொறுப்பேற்ற மேஜர் ஜெனரல் ராசிக குமார வுக்கும் இடையிலான சம்பிரதாயபூர்வ சந்திப்பு ஆளுநர் செயலகத்தில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை காலை நடைபெற்றது.

சந்திப்பின்போது வடக்கு மாகாண ஆளுநரால் கடந்த ஆண்டு விவசாயத் தேவைக் காக விடுவிக்கப்பட்ட மக்களின் காணிகளுக்கு அண்மையாக அமைந்துள்ள இராணுவ வேலியைப் பின் நகர்த்துவதற் கான கோரிக்கை முன்வைக் கப்பட்டது. அதற்குரிய நிதி ஒதுக்கீடு கிடைக்கப்பெறாத போதிலும் தற்காலிக பின்ன ரங்க வேலியை அமைக்கப் பட்டு வருவதாகவும் ஆளுந ருக்கு தெரியப்படுத்தப்பட் டது.

மேலும், மக்களிடம் காணி களை மீளக்கையளிக்கும் போது அங்கு களவுகள் இடம் பெறுவதாக மக்களிடமிருந்து முறைப்பாடுகள் கிடைக்கப் பெறுகின்றன என்பதைச் சுட்டிக்காட்டிய ஆளுநர் அதற் கு அமைவான பாதுகாப்பு முன் னேற்பாடுகளுடன் அவற்றைக் கையளிப்பதற்குரிய நடவடி க்கை எடுக்கு மாறும் கோரி னார்.

வடக்கில் நிலவும் உயிர் கொல்லி போதைப்பொருள் பாவனை தொடர்பிலும் இரா ணுவத் தளபதி ஆளுநரிடம் கேட்டறிந்து கொண்டார். உயிர் கொல்லி போதைப் பொருளுக்கு அடிமையானவர்களுக்கான புனர் வாழ்வு நிலையத்தை யாழ்ப்பா ணத்தில் ஆரம்பிப்பதற்குரிய நடவடிக்கைகள் துரிதமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது எனவும் ஆளுநர் சுட்டிக் காட்டினார்.

இந்தச் சந்திப்பின் இறுதி யில் நினைவுச் சின்னங்களை ஆளுநரும், இராணுவத் தள பதியும் பரிமாறிக் கொண்ட னர். (நி)

# கொடிகாமம்-பரந்தன் வரை குறுந்தூரப் பேருந்து சேவை

(யாழ்ப்பாணம்)

கொடிகாமம் சந்தி தொட க்கம் பரந்தன் சந்தி வரை யிலுமான குறுந்தூர பேரு ந்து சேவை விரைவில் முன்னெடுக்கப்பட வேண் டும் என்று வடக்கு மாகாண வீதிப் பயணிகள் போக்கு வரத்து அதிகார சபையின் தலைவர் க.மகேஸ்வரன் கோரிக்கை விடுத்துள்ளார். இது தொடர்பில் அவர் விடுத் துள்ள ஊடக அறிக்கை யில் தெரிவிக்கப்பட்டுள்ளதா வது,

ஏ-9 வீதியில் கொடி காமம் சந்தியிலிருந்து பரந் தன் சந்திக்கு இடையிலான பகுதிகளைச் சேர்ந்த மக்க ளும், பாடசாலை மாணவர் களும் தங்களுக்கான போக்குவரத்துச் சேவை சீராகக் கிடைப்பதில்லை யென கிளிநொச்சி மாவட்டச் செயலர் மேற்கொண்ட முறைப்பாட்டுக்கு அமை வாக இலங்கைப் போக்கு வரத்துச் சபை மற்றும் வட இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர் சங்கம் ஆகியனவற்றுக்கு என்னால் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

குறுந்தூர பேருந்து சேவை இல்லாத காரண த்தால் இப் பகுதி பயணிகள் நீண்டதூர பேருந்துகளை நம்பியுள்ளனர். ஆனால் பல நீண்டதூர பேருந்துகள் இப் பகுதியிலுள்ள பயணிகளை ஏற்றாமல் தவிர்க்கின்றன.

எனவே ஏ-9 வீதியில் சேவையில் ஈடுபடுகின்ற யாழ் - வவுனியா, யாழ் - முல்லைத்தீவு, யாழ் -கிளி நொச்சி, யாழ்- துணுக்காய் வழித்தடப் பேருந்துகள் அனைத்தும் கொடிகாமம் சந்தி தொடக்கம் பரந்தன் சந்தி வரையிலுமான குறுந் தூர பயணிகளை ஏற்றிச் செல்லுதல் கட்டாயம் என கடமையில் இருக்கும் சாரதி, நடத்துநர்களுக்கு அறிவு றுத்தல் வழங்குமாறு இலங் கைப் போக்குவரத்துச் சபை மற்றும் வட இலங்கை தனி யார் பேருந்து உரிமையா ளர்சங்கம் ஆகியன வற்றைக் கோரியுள்ளேன், என்று அந்த ஊடக அறிக்கையில் அதிகார சபையின் தலைவர் க.மகேஸ்வரன் குறிப்பிட் டுள்ளார். (8)

# யாழில் சங்கிலி அறுப்பு! ஒருவர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் பெண் ஆசிரியர் ஒருவரின் ஒரு பவுண் தங்கச் சங்கிலியை அறுத்த சந்தேகநபர் ஒருவர் சுன்னாகம் பொலிஸாரால் நேற்று முன் தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

இது குறித்து மேலும் தெரியவருகையில்,

ஏழாலை மகா வித்தியால யத்தில் கடமை புரியும் குறித்த ஆசிரியர் பாடசா லையில் இருந்து வரும் போது மருதனார்மடம் பகுதியில் வைத்து முகத்தை மூடி துணி கட்டியிருந்த நபர் ஒருவர் அவரது தங்கச் சங்கிலியை அறுத்துச் சென்றுள்ளார்.

பாதிக்கப்பட்ட ஆசிரியர் இது குறித்து சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறைப் பாடு பதிவு செய்துள்ளார். அந்த வகையில் விசாரணை களை மேற் கொண்ட சுன்னா கம் பொலிஸார் நேற்று முன்தினம் 26 வயதுடைய குறித்த சந்தேக நபர் ஒருவரை கைது செய்துள்ளனர்.

குறித்த சந்தேகநபர் ஹெரோயினுடன் கைதாகி 8 மாதங்கள் சிறைவாசம் அனு பவித்த பின்னர் கடந்த இர ண்டு மாதங்களுக்கு முன் னரே விடுதலையாகி வந்த வர் என பொலிஸார் தெரி வித்தனர். அவரை மல்லாகம் நீதி மன்றத்தில் முற்படுத்து வதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (8-104)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 250 | 250 | 250 | 250 | 350 |
| உருளைக்கிழங்கு | 180 | 200 | 200 | 160 | 200 |
| பச்சைமிளகாய் | 500 | 400 | 450 | 600 | 500 |
| தக்காளி | 350 | 350 | 350 | 280 | 300 |
| மரவள்ளிக்கிழங்கு | 280 | 300 | 300 | 250 | 340 |
| கோவா | 400 | 450 | 450 | 300 | 450 |
| கரட் | 800 | 450 | 450 | 400 | 450 |
| பூசணி | 150 | 160 | 160 | 120 | 150 |
| புடோல் | 120 | 150 | 120 | 120 | 200 |
| வாழைக்காய் | 100 | 120 | 100 | 100 | 100 |
| சின்ன வெங்காயம் | 350 | 150-350 | 150-350 | 250-400 | 400 |
| பெரிய வெங்காயம் | 120 | 140 | 160 | 120 | 150 |
| பாகற்காய் | 600 | 500 | 500 | 500 | 800 |
| வெண்டக்காய் | 150 | 120 | 120 | 120 | 300 |
| கருணைக் கிழங்கு | 300 | 350 | 350 | 250 | 400 |
| பயற்றங்காய் | 350 | 400 | 400 | 350 | 300 |
| லீக்ஸ் | 350 | 380 | 350 | 280 | 400 |
| பீற்றூட் | 300 | 300 | 400 | 280 | 250 |
| கறிமிளகாய் | 400 | 500 | 500 | 500 | 500 |
| முருங்கைக்காய் | 1500 | 1300 | 1300 | 900 | 1000 |
| போஞ்சி | 600 | 650 | 600 | 500 | 800 |
| கத்தரிதம்புள்ள | 200 | 200 | 200 | -- | 300 |
| கீரை - 1 பிடி | 60 | 40-100 | 30-80 | 80 | 80 |
| தேசிக்காய் | 350 | 300 | 250 | 850 | 350 |
| தேங்காய் (ஒன்று) | 180 | 200 | 220 | 120-170 | 150-200 |
| இராசவள்ளி | 600 | 600 | 700 | 500 | 600 |
| வெங்காயப்பூ | 450 | 500 | 500 | 450 | 600 |
| முள்ளங்கி | 200 | 180 | 150 | 100 | 200 |
| பொன்னாங்காணி | 80 | 50 | 50 | 100 | 60 |
| வல்லாரை | 80 | 70 | 70 | 80 | 80 |
| ஈரப்பலா | 200 | 150 | 200 | - | 200 |

# தெரு நாய்களைக் கட்டுபடுத்த ஒருங்கிணைந்த வேலைத்திட்டம்

(யாழ்ப்பாணம்)

தெரு நாய்களைக் கட்டுப் படுத்துவது தொடர்பான ஒருங் கிணைந்த வேலைத் திட் டத்தை முன்னெடுக்கும் கலந்து ரையாடல் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தலைமையில் ஆளுநர் செயலகத்தில் நேற்று முன் தினம் நடைபெற்றது.

வடக்கு மாகாணத்தில் குறிப்பாக யாழ்ப்பாணம், மன் னார், முல்லைத்தீவு மாவட் டங்களில் தெரு நாய்களால் ஏற்படும் பாதிப்புகள் அதிக ரித்துள்ளமை தொடர்பிலும், இவற்றைக் கட்டுப்படுத்து வதற்கு கடந்த காலங்களில் பல்வேறு திணைக்களங் களால் நடவடிக்கை எடுக்கப்பட் டிருந்தாலும் போதியளவு முன் னேற்றம் இல்லை என்பதைச் சுட்டிக்காட்டிய ஆளுநர், இது தொடர்பில் ஒருங்கிணைந்த வேலைத் திட்டத்தின் அவசி யத்தை வலியுறுத்தினார்.

வடக்கு மாகாண உள்ளூ ராட்சித் திணைக்களம், வடக்கு மாகாண கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம், வடக்கு மாகாண சுகாதாரத் திணை க்களம் என்பன ஒருங் கிணைந்து இந்தத் திட்ட த்தை முன்னெடுப்பதற்கான செயற் றிட்டத்தை தயாரிப்பது எனவும் முதல் கட்டமாக யாழ். மாவட் டத்தில் இதனைச் செயற் படுத்துவது என்றும் குறித்த கலந்துரையாடலில் தீர்மானிக் கப்பட்டது.

வடக்கு மாகாண விவசாய அமைச்சின் செயலாளர், உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர், சுகாதார அமைச் சின் சிரேஷ்ட உதவிச் செயலர், உள்ளூராட்சி அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலர், வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், வட க்கு மாகாண கால்நடை உற் பத்தி சுகாதாரத் திணைக் களப் பணிப்பாளர், யாழ்ப்பாண மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ஆகியோர் இந்தக் கலந்துரையாடலில் பங் கேற்றனர். (8)

## மஹா கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

வண்ணை-சாந்தையர் மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலய மஹா கும்பாபிஷேக கிரியைகள் நேற்று வெள்ளிக் கிழமை முதல் ஆரம்பமாகித் தொடர்ந்து எதிர்வரும் ஜூலை மாதம் 2 ஆம் திகதி புதன்கிழமை வரை இடம் பெறவுள்ளது.

எதிர்வரும் ஜூலை மாதம் 1 ஆம் திகதி செவ் வாய்க்கிழமை காலை 8 மணி முதல் மாலை 4 மணிவரை எண்ணெய்க் காப்பு சாத்துதல் நிகழ்வும், 2ஆம் திகதி புதன்கிழமை காலை 5.54 மணி முதல் காலை 6.56 மணி வரை யுள்ள சுப முகூர்த்தத்தில் மஹா கும்பாபிஷேகமும் இடம்பெற்று தொடர்ந்து 15 தினங்கள் மண்டலாபி ஷேகமும் இடம்பெறவுள்ள தென ஆலய தர்ம பரிபா லன சபையினர் தெரிவித்துள் ளனர். (8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்தமிழர் பிரச்சினையைப் பேசும் ‘ஊழி’ திரைப்படத்திற்கு சரசவிய விருது





(கொழும்பு)

ஈழத் தமிழர் பிரச்சினை பற்றிப் பேசும் ஊழி திரைப்படம் சரசவிய விருது விழாவில் 4 விருதுகளைப் பெற்றுள்ளது.

1964 ஆம் ஆண்டிலிருந்து இலங்கையின் மிகவும் மதிப்புமிக்க தேசிய திரைப்பட விருது விழாவான சரசவிய விருது விழாவில் வருடத்தின் சிறந்த தமிழ் மொழி திரைப்படமாக ஊழி திரைப்படம் வரலாறு படைத்துள்ளது.

இந்தத் திரைப்படம் 4 முக்கிய பிரிவுகளில் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது. சிறந்த தமிழ்த் திரைப்படம் விருதை இயக்குனர் ரஞ்சித் ஜோசப் பெற்றார்.

சிறந்த வசன கர்த்தாவுக்கான விருதை தீபச்செல்வன் பிரதீபன் பெற்றார். சிறந்த எடிட்டிங் விருதை சிவலிங்கம் அருணாசலமும் சிறந்த ஒளிப்பதிவு விருதை ராஜேஷ் வர்மாவும் பெற்றனர்.

இலங்கையில் திரையரங்குகளில் வெளியிட தணிக்கை செய்யப்பட்ட பதிப்பு சமர்ப்பிக்கப்பட்டாலும், சரசவிய நடுவர் மன்றம் அசல், தணிக்கை செய்யப்படாத சர்வதேச பதிப்பை அடிப்படையாகக் கொண்டு திரைப்படத்தை மதிப்பீடு செய்து விருது வழங்கியுள்ளது.

இத்திரைப்படம் ஈழத் தமிழ் மக்களின் போருக்குப் பிந்தைய அரசியல் மற்றும் பொருளாதாரப் போராட்டங்களைப் பற்றி பேசுகிறது.

36ஆவது சரசவிய விருது விழா கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி)


# INVITATION FOR BIDS(IFB)
## Poonakary Predeshiya Sabha, Poonakary

1. The **Chairman, Divisional Procurement Committee**, on behalf of the **Poonakary Pradeshiya Sabha** invites sealed bids from eligible and qualified bidders for the works described in the table below. All the relevant details are described in the same table.
2. Bidding will be conducted through **National Competitive Bidding Procedure (NCB).**
3. Qualification' requirements are indicated in section 4 of the Procurement Document. Additional details are provided in the Section 5 of the Procurement Document.
4. Interested bidders may obtain further information from address given below in 6 and inspect the bidding documents at the same place on any working days from during the document issuing period mentioned in table below between 09:00 hrs and 15:00 hrs.

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | **Document Issuing/Purchasing Period** | | | | **From 30.06.2025 until 14.07.2025** | | | | | |
| | **Pre-Bid Conference** | | | | **At 10.30 A.M on 10.07.2025** | | | | | |
| | **Closing and Opening of Bids** | | | | **At 02.30 P.M on 15.07.2025** | | | | | |
| **Bid ID** | **Description of Work** | **Source of Fund** | **Estimated Cost (Rs.) In Million (without VAT)** | **Contract Period (Days)** | **Required CIDA Grade & Speciality** | **Non-Refundable Fee (Rs.)** | **Bid Validity Period upto** | **Required Bid Security/ Refundable Cash Deposit** | | |
| | | | | | | | | **Amount (Rs.)** | **Validity Period** | |
| **PSDG/NP/ KN/POPS/ LAR/05** | **Construction of Narayanthalvu Road** | PSDG | 4.23 | 84 | C8 or above (Highway construction) | 3,000.00 | 02-Sep-2025 | 64,000.00 | 30-September-2025 | |
| **PSDG/NP/ KN/POPS/ CWS/02** | **Improvement of water supply facilities to Botanical garden Mulankavil** | PSDG | 2.20 | 84 | C9 or above (Building) | 3,000.00 | 02-Sep-2025 | 33,000.00 | 30-September-2025 | |

5. A complete set of Procurement Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the **Secretary, Poonakary Pradeshiya Sabha, Poonakary, Kilinochchi (T.P:021 228 2666, Fax:021 228 4572, email: poonakaryps@yahoo.com) from 9:00 hrs to 15:00 hrs. During the period stated in table above upon payment of non-refundable fees as mentioned in the table**. The method of payment will be by cash.
6. Bids (Original & Duplicate) must be delivered to the **Chairman, Divisional Procurement Committee, Poonakary Pradeshiya Sabha, Poonakary, Kilinochchi on or before 14.30 Pm as stated in table above**. Bid number must be written on the left-hand upper corner of the envelope. Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the Bidder's representatives who choose to attend in person or vital in the address above.
7. Pre-Bid Conference will be held at Conference Hall, **Secretary, Poonakary Pradeshiya Sabha, Poonakary, Kilinochchi. Commencing at 10.30 AM as stated in table above.**
8. All Bids must be accompanied by either Bid security or refundable cash deposit as per the information given in the Tables.

**Chairman**
**Divisional Procurement Committee,**
**Poonakary Pradeshiya Sabha,**
**Poonakary.**


# சிறு மற்றும் நடுத்தர முயற்சிகளுக்கு அரசாங்கம் உதவ வேண்டும்
## நாமல் விடுத்துள்ள கோரிக்கை

(கொழும்பு)

சிறு மற்றும் நடுத்தர தொழில் முனைவோரை பாதுகாக்க அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச வலி யுறுத்தியுள்ளார்.

சிறு மற்றும் நடுத்தர தொழில்கள் (SMEs) கடனடைப்புக்கான பரேட்டே சட்டம் எதிர்வரும் ஜூலை 1 முதல் நடை முறைக்கு வரும் நிலையில், இந்தத் தொழில்களைக் காப்பாற்ற நடவடிக்கை எடுக்க வேண்டுமென தெரிவித்துள்ளார்.

இச்சட்டத்தின் கீழ், 50 மில்லியன் ரூபாவிற்கு கூடுதலான கடன் நிலுவையுள்ள சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியான்மையாளர்களிடமிருந்து வங்கிகள் நேரடியாக கடனை மீட்டெடுக்க அதிகாரம் பெறுகின்றன.

இது நூற்றுக்கணக்கான தொழில்களுக்கு அபாயத்தை ஏற்படுத்தும் என்று நாமல் ராஜபக்ஷ எச்சரித்துள்ளார்.

தனது X தளத்தில் வெளியிட்ட செய்தியில், அரசாங்கம் தலையீடு செய்து பொருளாதார சிக்கல்களை எதிர்கொள்ளும் தொழில்களுக்கு நிவாரண திட்டங்களை கொண்டுவர வேண்டும் என்றும் அவர் கோரியுள்ளார்.

நாடெங்கும் ஏராளமான தொழில்கள் மூடப்படும் அபாயம், வேலை இழப்புகள் அதிகரிக்கும் வாய்ப்பு, அதனுடன் நாட்டின் மீட்சிபாதையில் இருக்கும் பொரு ளாதாரத்துக்கு கூடுதல் அழுத்தம் ஏற்படும் என அவர் எச்சரித்துள்ளார்.

ஏற்றுமதி சந்தை மந்தமான நிலையிலும், உலக பொருளாதாரமும் நிச்சயமற்ற நிலையில், சிறு மற்றும் நடுத்தர முயற்சியான்மையாளர்களுக்கு அரசாங்கம் உதவ வேண்டுமென தெரிவித்துள்ளார்.

இந்தத் தளர்வு கிடைக்காவிட்டால், ஆயிரக்கணக்கானவர்களின் வாழ்க்கைகள் ஆபத்தில் சிக்கும், மேலும், மத்திய வங்கியையும், வணிக வங்கிகளுடனான கலந்துரையாடல் மூலம் பரேட்டே சட்ட அமுலுக்கு உரிய கால வரம்பை மேலும் நீட்டிக்க வேண்டும் எனவும் கோரியுள்ளார். (நி)

# பேருந்து சாரதி திடீர் மரணம் நூலிழையில் தப்பிய மாணவர்கள்

(திருமலை)

பாடசாலை மாணவர்களை ஏற்றிச் சென்ற பேருந்து ஒன்று வீதியோரத்தில் இருந்த மின் கம்பத்தில் மோதி விபத்துக்குள்ளானதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த விபத்தானது, திருகோணமலை - கந்தளாய் மணிக்கூண்டு அருகே நேற்றுக் காலை இடம்பெற்றுள்ளது. பேருந்து ஓட்டிச் சென்ற சாரதி மாரடைப்பால் உயிரிழந்துள்ளதுடன், அதன் காரணமாகவே விபத்து நிகழ்ந்திருக்கலாம் என பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

இந்த நிலையில், விபத்து காரணமாக இரண்டு மோட்டார் சைக்கிள்கள் மற்றும் ஒரு கடையின் முன்பக்க கூரை சேதமடைந்துள்ளது.

விபத்து தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## ட்ரான்ஸ்போமர் வெடித்து 29 மாணவர்கள் உயிரிழப்பு!

### ஆபிரிக்காவில் சோகம்



(பாங்குய்)

மத்திய ஆபிரிக்க குடியரசில் ட்ரான்ஸ்போர்மர் வெடித்து 29 மாணவர்கள் உயிரிழந்துள்ளனர்.

பல மணி நேர போராட்டத்துக்குப் பிறகு தீ கட்டுக்குள் கொண்டு வரப்பட்டது.

ஆபிரிக்க நாடுகளில் ஒன்று மத்திய ஆபிரிக்க குடியரசு. இதன் தலைநகர் பாங்குயில் உயர்நிலைப் பள்ளி ஒன்று செயற்படுகிறது.

இங்கு 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் பயின்று வருகின்றனர்.

இந்தப் பள்ளியில் ஆண்டு இறுதித் தேர்வுகள் தொடங்கி நடைபெற்று வருகிறது.

எனவே மாணவர்கள் பள்ளியில் அமர்ந்து தேர்வு எழுதிக் கொண்டிருந்தனர். அப்போது அங்கு குண்டு வெடிப்பது போல பயங்கர சத்தம் கேட்டது. இதனால் பீதியடைந்த மாணவர்கள் அங்கும், இங்குமாக ஓடினர்.

இதனைத் தொடர்ந்து பள்ளி கட்டடம் தீப்பிடித்து எரிந்தது. மளமளவென தீப்பற்றி எரிந்ததால் அந்த இடம் முழுவதும் கரும்புகை மண்டலமாக மாறியது.

இதற்கிடையே தீ விபத்து குறித்து மீட்புப் படையினருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. அதன்பேரில் அங்கு விரைந்த தீயணைப்பு வீரர்கள் தண்ணீரை பாய்ச்சியடித்தனர். அவர்களின் பல மணிநேர போராட்டத்துக்கு பிறகு தீ கட்டுக்குள் கொண்டுவரப்பட்டது.

இந்தக் கோரசம்பவத்தில் 29 மாணவர்கள் பரிதாபமாக உயிரிழந்தனர். கூட்டநெரிசலில் சிக்கிய 280 பேருக்கு படுகாயம் ஏற்பட்டது. மீட்புப் படையினர் அவர்களை மீட்டு மருத்துவமனையில் அனுமதித்தனர். அங்கு அவர்களுக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. அவர்களில் பலரது நிலைமை கவலைக்கிடமாக இருப்பதால் பலி எண்ணிக்கை உயரும் என அஞ்சப்படுகிறது.

இதுகுறித்து கல்வித் துறை உயர் அதிகாரிகள் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்று ஆய்வு செய்தனர். தொடர்ந்து நடைபெற்ற விசாரணையில், பள்ளி அருகே இருந்த ட்ரான்ஸ்போர்மரில் சீரமைப்புப் பணி நடந்தபோது திடீரென வெடித்துச் சிதறியது தெரிய வந்துள்ளது. (நி)

## அமெரிக்காவு... பேச்சுவார்த்... ஈரான் தி...

(வோஷிங்டன்)

**அணு ஆயுதங்கள் பற்றி அமெரிக்காவுடன் எந்தப் பேச்சுவார்த்தையும் இல்லை என ஈரான் திட்டவட்டமாக தெரிவித்துள்ளது. அடுத்த வாரம் பேச்சுவார்த்தை நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது என்ற அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப்பின் கூற்றை ஈரான் வெளியுறவு அமைச்சர் அப்பாஸ் அரக்ச்சி மறுத்துள்ளார்.**

அமெரிக்காவுடன் மீண்டும் பேச்சுவார்த்தை நடத்துவது தங்கள் நலன்களுக்கு உதவுமா என்பதை ஈரான் இன்னும் ஆராய்ந்து வருவதாகவும், குறிப்பாக அமெரிக்கா மற்றும் இஸ்ரேல், ஈரான் அணுசக்தி வசதிகள் மீது நடத்திய தாக்குதல்களுக்குப் பிறகு, ஐந்து சுற்றுப் பேச்சு வார்த்தைகள் தடைப்பட்ட நிலையில் இந்த மதிப்பீடு நடைபெற்று வருவதாகவும் அரக்ச்சி தெரிவித்தார்.

ஈரான் அணுசக்தி திட்டம் முழுக்க முழுக்க சிவில் நோக்கங்களுக்காகவே என்றும் அவர் மீண்டும் தெரிவித்தார்.

அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் நடத்திய தாக்குதல் கள் கணிசமான சேதத்தை ஏற்படுத்தியதை அரக்ச்சி ஒப்புக்கொண்டார்.

## சர்வதேச விண்வெளி நிலையத்துடன் வெற்றிகரமாக இணைந்த டிராகன்

(வோஷிங்டன்)

அமெரிக்க விண்வெளி கழகமான நாசா, இந்திய விண்வெளிக் கழகமான இஸ்ரோ ஆகியவை இணைந்து ஆக்சியம் ஸ்பேஸ் ஆக்ஸ்-4 என்ற திட்டத்தின் கீழ், சர்வதேச விண்வெளி நிலையத்துக்கு வீரர்களை அனுப்பியது.

இந்தத் திட்டத்தின் கீழ் இந்திய விமானப்படை விமானியான சுபான்ஷு சுக்லா விண்வெளிக்கு சென்றுள்ளார். இவருடன் 3 விண்வெளி வீரர்கள் சென்றுள்ளனர்.


ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனத்தின் பால்கன் 9 ராக்கெட் மூலம் டிராகன் விண்கலத்தில் அவர்கள் செல்ல இருந்த பயணம், தொழில்நுட்ப கோளாறு, மோசமான வானிலை ஆகியவை காரணமாக 6 முறை ஒத்தி வைக்கப்பட்டது.

இந்த நிலையில், ஆக்சியம் 4 திட்டம் கடந்த புதன்கிழமை வெற்றிகரமாக செயற்படுத்தப்பட்டது. இந்திய வீரர் சுபான்ஷு சுக்லா உட்பட 4 பேர் விண்வெளி பயணம் மேற்கொண்டனர்.

புளோரிடாவில் இருந்து பால்கன் 9 மூலம் டிராகன் விண்கலத்தில் நால்வரும் விண்வெளிக்கு பயணித்துள்ளனர்.

இந்நிலையில், இந்திய வீரர் சுபான்ஷு சுக்லா உடன் சென்ற டிராகன் விண்கலம் சர்வதேச விண்வெளி நிலையத்துடன் இணைந்தது.

கென்னடி விண்வெளி மையத்தில் இருந்து புறப்பட்ட




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...டன் அணுசக்தி ...தை இல்லை!

## ...ட்டவட்டம்



இத்தாக்குதல்கள் ஈரானின் அணு ஆயுத திறனைக் கட்டுப்படுத்தும் நோக்கில் நடத்தப்பட்டதாக அமெரிக்காவும் இஸ்ரேலும் கூறுகின்றன.

கடந்த புதன்கிழமை நேட்டோ உச்சிமாநாட்டில் பேசிய ட்ரம்ப் அமெரிக்கா மற்றும் ஈரான் அடுத்த வாரம் சந்திக்கும் என்று தெரிவித்திருந்தார்.

மேலும் ஈரான் அணுசக்தி தளங்கள் மீதான பென்டகன் தாக்குதல்கள் வெற்றி பெற்றதாகவும் கூறியிருந்தார்.

அமெரிக்க வெளியுறவுத்துறை செயலர் மார்கோ ரூபியோ, ஈரான் அணு ஆயுதங்களை பெறுவதைத் தடுக்க அமெரிக்கா முயன்று வருவதாகவும், ஆட்சி மாற்றம் என்பது ஒரு சாத்தியமான விளைவு என்றும் தெரிவித்தார். (நி)

## அணுஆயுத பரவல் தடை ஒப்பந்தம்; வெளியேறும் ஈரான்: எச்சரிக்கும் பிரான்ஸ்



(பாரிஸ்)

அணு ஆயுதப் பரவல் தடை ஒப்பந்தத்தில் இருந்து ஈரான் வெளியேறுவது ஆபத்து என்று பிரான்ஸ் ஜனாதிபதி இமானுவேல் மெக்ரான் எச்சரித்துள்ளார்.

அணு ஆயுதங்களை உற்பத்தி செய்யும் ஈரானின் செயலுக்கு இஸ்ரேல் மற்றும் அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றன. அமெரிக்கா பலமுறை எச்சரித்தும் அணு ஆயுதங்கள் தயாரிப்பை கைவிட ஈரான் மறுத்து வந்தது.

எனவே, இஸ்ரேலுடன் போர் நடத்தி வந்த ஈரானின் அணுசக்தி நிலைகள் மீது அமெரிக்கா பயங்கர தாக்குதல் நடத்தியது. இதில், அந்நாட்டின் 3 முக்கிய அணுசக்தி நிலைகள் பெரிதும் சேதமடைந்தன.

இதனிடையே, அணு ஆயுதப் பரவல் தடை ஒப்பந்தத்தில் இருந்து வெளியேறுவதாக ஈரான் அறிவித்துள்ளது.

இந்த நிலையில், அணு ஆயுதப் பரவல் தடை ஒப்பந்தத்தில் இருந்து ஈரான் வெளியேறுவது ஆபத்தானது என்று பிரான்ஸ் ஜனாதிபதி இமானுவேல் மேக்ரான் எச்சரித்துள்ளார்.

ஐரோப்பா ஒன்றியத்தின் மாநாட்டில் பங்கேற்ற பிறகு செய்தியாளர்களிடம் அவர் பேசியதாவது, ஈரான் அணுசக்தி நிலைகள் மீது அமெரிக்கா நடத்திய தாக்குதல் சிறப்பான ஒன்று. ஆனால் அணு ஆயுதப் பரவல் தடை ஒப்பந்தத்திலிருந்து ஈரான் வெளியேறுவது மோசமானதாகும். மேலும், இது இந்த அமைப்பை பலவீனப்படுத்துவதாக அமைந்து விடும். எனவே, அணு ஆயுதங்கள் உற்பத்தியை ஈரான் மீண்டும் தொடங்குவதைத் தடுக்க வேண்டும், என்றார்.

அணு ஆயுதப் பரவல் தடை ஒப்பந்தம் என்பது அணு ஆயுதங்கள் மற்றும் தொடர்புடைய தொழில்நுட்பங்களின் பரவலைத் தடுக்க உருவாக்கப்பட்ட சர்வதேச அமைப்பாகும். இந்த அமைப்பில் அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்ஸ், ரஷ்யா மற்றும் சீனா ஆகிய நாடுகள் உறுப்பினர்களாக உள்ளனர்.

தற்போது, இந்த உறுப்பு நாடுகளுடன் ஈரான் விவகாரம் தொடர்பாக பிரான்ஸ் ஜனாதிபதி இமானுவேல் மேக்ரான் பேச்சுவார்த்தை நடத்த முடிவு செய்துள்ளார். முதற்கட்டமாக அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்பிடம் தொலைபேசியில் ஆலோசனை நடத்தியிருப்பது குறிப்பிடத்தக்கது. (நி)

...குழு சரியாக 28 மணி நேரத்தில் சர்வதேச விண்வெளி நிலையத்தை சென்றடைந்தது. (நி)



## அமெரிக்காவுக்கு பாடம் புகட்டியுள்ளோம்

## ஈரான் தலைவர் வீராப்புப் பேச்சு

(டெஹ்ரான்)


அமெரிக்காவின் முகத்திலேயே அறைந்தோம். ஈரானைத் தொட நினைத்தால் அதிக விலை கொடுக்க நேரிடும் என ஈரான் தலைவர் அயதுல்ல காமேனி தெரிவித்தார்.

இஸ்ரேல் - ஈரான் இடையிலான போர் நிறுத்தம் அமுலுக்கு வந்த பின் முதன்முறையாக பேசும் போது இவ்வாறு தெரிவித்தார்.

கட்டாரில் உள்ள அமெரிக்க விமானப் படைத் தளத்தை தாக்கி பதிலடி கொடுத்துள்ளோம்.

எங்களை தொட நினைத்த அமெரிக்காவுக்கு, பாடம் புகட்டியுள்ளோம். தற்போதைய போரில் அமெரிக்காவுக்கு எந்தப் பலனும் இல்லை.

இஸ்லாமிய குடியரசு வெற்றி பெற்றது. மீண்டும் ஆக்கிரமிப்பு உள்ளிட்டவை செய்தால் எதிரி நிச்சயம் அதிக விலை கொடுக்க நேரிடும். தேவைப்பட்டால் இதுபோன்ற நடவடிக்கைகள் எதிர்காலத்திலும் நிகழலாம்.



கட்டாரில் உள்ள அமெரிக்கத் தளங்கள் மீது ஈரான் தாக்குதல் நடத்தியமை குறிப்பிடத்தக்கது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஹெகெலியவுக்கு எதிராக ரணில் சாட்சி



(கொழும்பு)

முன்னாள் சுகாதார அமைச்சர் ஹெகெலிய ரம்புக்வெல்லவுக்கு எதிரான வழக்கில் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, சாட்சியாகப் பெயரிடப்பட்டுள்ளார்.

அத்துடன் பல முன்னாள் அமைச்சரவை அமைச்சர்களும் சாட்சிகளாகப் பெயரிடப்பட்டுள்ளனர்.

தரமற்ற மனித இம்யூனோ குளோபுலின் குப்பிகளை இறக்குமதி செய்ததாகக் கூறப்படும் குற்றச்சாட்டின் அடிப்படையில், தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த வழக்கின் சாட்சிகளாக, முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை தவிர, முன்னாள் அமைச்சர்கள் நிமல் சிறிபால டி சில்வா, விஜயதாச ராஜபக்ச, டக்ளஸ் தேவானந்தா மற்றும் ரொசான் ரணசிங்க ஆகியோரும் பெயரிடப்பட்டுள்ளனர்.

அத்துடன் தேசிய மருந்துகள் ஒழுங்குமுறை ஆணையகத்தின் தலைவர் ஆனந்த விஜேவிக்ரம உட்பட மருத்துவர்கள் குழுவும், சாட்சியாகப் பெயரிடப்பட்டுள்ளது.

முறையற்ற இந்த கொள்வனவின் மூலம் 144.4 மில்லியன் ரூபாய் பொது நிதியைத் தவறாகப் பயன்படுத்த சதி செய்ததாகப் பிரதிவாதிகள் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. (நி)


# கல்யாணமாலை

## சர்வதேச இலவச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு:1977-இந்து
நட்சத்திரம்: அத்தம்
2இல்செவ்
கி-பா- 49 3/4
உயரம்: 5'7"
தகைமைஃதொழில்: A/L, Transport
எதிர்பார்ப்பு: தகுதியான பெண், விவாகரத்தானவர்
தொ.இ: B/15727

பிறப்பு:1990-இந்து
நட்சத்திரம்:அவிட்டம்
கி-பா- 30
உயரம்:5'4"
தகைமை/தொழில்- O/L,கோயில் வேலை
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/15728

பிறப்பு:1991-இந்து
நட்சத்திரம்: மூலம்
8இல்செவ்
கி-பா- 70
உயரம்: 5'7"
தகைமை/தொழில்:Diploma, Accountant &Manager
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/15729

பிறப்பு: 1996- இந்து
நட்சத்திரம்: மகம்
2இல் செவ்
உயரம்:5'5"
தகைமை/தொழில் -BSc, MSc, Engineer(AUS)
எதிர்பார்ப்பு: உயர்பதவி
தொ.இ: B/15730

பிறப்பு: 1995- இந்து
நட்சத்திரம்: உத்தராடம்
கி-பா- 50 1/2
உயரம்:5'6"
தகைமை/தொழில்: A/L,Sales, Rep(pvt)
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/15735

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு-1997- RC
நட்சத்திரம்: அவிட்டம்
7இல்செவ்
கி-பா- 56 3/4
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: BSc,ITwork
எதிர்பார்ப்பு: அரச தனியார் உத்தியோகம்
தொ.இ: G/15739

பிறப்பு-1993-இந்து
நட்சத்திரம்- சதயம்
8இல்செவ்
கி-பா-43 3/4
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: BSc, Nurse
எதிர்பார்ப்பு: தகுதியான ஆண்
தொ.இ: G/15740

பிறப்பு-1993-இந்து
நட்சத்திரம்-விசாகம்
12இல்செவ்
உயரம்-5'4"
தகைமை/தொழில்: MSc, London
எதிர்பார்ப்பு: Only London
தொ.இ: G/15741

பிறப்பு-1997-RC
நட்சத்திரம்: மூலம்
தகைமை/தொழில் - BBM,MA
எதிர்பார்ப்பு: உத்தியோகம்,வெளிநாடு
தொ.இ: G/15742

பிறப்பு-1994-இந்து
நட்சத்திரம்:உத்தரம்
உயரம்: 5'2"
தகைமை/தொழில் - A/L
எதிர்பார்ப்பு: வெளிநாடு
தொ.இ: G/15745

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


## இன்று ஒரு தகவல் 404

தென்கச்சி கோ.சுவாமிநாதன்



# தேடல்

ஒருவருக்கு ஒரு ஆசை! என்ன ஆசை? கடவுளைப் பார்க்க வேண்டும் என்று ஆசை! அதற்கு என்ன செய்வது என்று யோசித்தார். என்னென்னமோ செய்து பார்த்தார். ஒன்றும் சரியாக வரவில்லை! கடவுளைப் பார்க்க முடியவில்லை!

அந்த சமயம் பார்த்து ஒரு ஆன்மிகப் பெரியவர் (ஆதி) சங்கரர் அந்த ஊருக்கு வந்தார். இவர் அவரிடம் ஓடிப்போய் கேட்டார். உடனே "இது மாதிரி நான் இறைவனைப் பார்க்க வேண்டும். அதற்கு என்ன செய்ய வேண்டும்? ஒருவழி சொல்லுங்கள் என்று கேட்டார். அதற்கு அவர் சொன்னார்.

"நீ தனிமையான ஒரு இடத்திலே இறைவனை நினைத்துத் தியானம் செய்! கடவுள் காட்சி கொடுப்பார்!" என்றார். உடனே இவர் ஒரு காட்டுக்குப் போனார். கண்ணை மூடினார். உட்கார்ந்து தியானம் செய்ய ஆரம்பித்தார். "ஏய் யார் நீ இங்கே என்ன செய்கிறாய்?" என்று ஒரு சத்தம்!

இவர் கண்ணைத் திறந்து பார்த்தார். பக்கத்திலே ஒரு வேடன் நின்று கொண்டிருந்தான். அவன் மறுபடியும் கேட்டான்.

"இங்கே என்ன செய்கிறாய்? என்று "நான் இறைவனைத் தேடித் தியானம் செய்து கொண்டிருக்கிறேன் என்றார். "இறைவனா? அது எப்படி இருக்கும்? சிங்கம் மாதிரி இருக்குமா? புலி மாதிரி இருக்குமா? கரடி மாதிரி இருக்குமா? எப்படி இருக்கும் சொல்? எனக்குத் தெரியாது இந்தக் காட்டிலே எதுவுமே இல்லை! நீ விபரத்தைச் சொல், அது எங்கே இருந்தாலும் பிடித்துக்கொண்டு வந்து விடுகிறேன் என்றான். அவருக்கு இது சங்கடமாய் போனது!

இவன் விபரம் தெரியாத நபராக இருக்கிறான். நம் தியானத்திற்கு வேறு இடைஞ்சலாக இருப்பான் போல இருக்கே. இவன் தொந்தரவிலேயிருந்து நாம் எப்படி மீள்வது என்று யோசித்தார். மறுபடியும் அவன் திரும்பி அங்கே வரக்கூடாது. இதற்கு என்ன செய்யலாம் என்று யோசித்தார். உடனே அவனிடம் சொன்னார்.

"இதோ பாருப்பா. இறைவன் எப்படி இருக்கும் என்று கேட்டாய் அல்லவா? அதன் தலை சிங்கம் மாதிரி இருக்கும். உடம்பு மனிதன் மாதிரி இருக்கும். அதாவது மனித உடம்பிலே சிங்கத்தோட தலை! எங்கேயிருந்தாலும் பார்த்துக் கொண்டு இருப்பார்!" என்றார்.

"சரி கொண்டு வருகிறேன் என்று" சொல்லி அவன் புறப்பட்டான். காலையிலே புறப்பட்டவன் காடு முழுவதும் தேடி அலைகிறான். தண்ணீர கூட குடிக்கவில்லை மாலைநேரம் வந்தவிட்டது. ரொம்ப களைத்துப் போய்விட்டான். நினைத்துப்பார்த்தான்.

"நான் இந்தக் காட்டுக்கு ராஜா! என்னாலேயே ஒரு மிருகத்தைக் கண்டுபிடிக்க முடியவில்லை. இதற்குப் பிறகு நான் உயிரோடு இருக்க வேண்டுமா?" என்று யோசித்தான். உடனே அங்கேயிருந்த ஒரு கொடியை பறித்தான். அதை ஒரு மரத்திலே கட்டினான். தூக்குக்கயிறு மாதிரி!

அதிலே கொண்டுபோய் தலையை விட்டான். தற்கொலை செய்வதற்காக அந்த நேரம் பார்த்துப் பக்கத்திலே இருந்த ஒரு புதரிலே லேசாக ஒரு சலசப்பு! என்ன என்று திரும்பிப் பார்த்தால் அங்கே ஒரு உருவம் நின்றுக்கொண்டிருந்தது. அதற்கு மனித உடம்பு சிங்கத்தோட தலை!

"அடடா உன்னைத்தானே இவ்வளவு நேரமாக தேடிக் கொண்டிருக்கிறேன் என்று இறங்கி ஓடி வந்தான். அதை அந்தக் கொடியாலேயே சுத்தி, கட்டி இழுத்துக் கொண்டு வந்தான் அந்தப் பெரியவரிடம் "இதோ பார், நீ சொன்ன மிருகம். கொண்டுவந்து விட்டேன்" என்றான். இவருக்கு ஒன்றும் புரியவில்லை கண்ணைத் திறந்து பார்த்தார்.

அந்தரத்திலே அந்தக் கொடி ஏதோ ஒரு உருவத்தை சுத்தியிருக்கிறது தெரிந்தது! உடனே புரிந்துகொண்டார், வந்திருக்கிறது இறைவன்தான் என்று அந்தத் திசையை நோக்கி வணங்கினார். "இறைவா! இங்கே நான் உன்னை நினைத்து தியானம் செய்துகொண்டிருக்கிறேன். என்னை விட்டுவிட்டு இந்த உயிரைக் கொல்லும் வேடனுக்குக் காட்சி கொடுத்திருக்கிறியே. இது நியாயமா?" என்றார்.

அப்ப அசரிரியா அந்தக் குரல் கேட்டது இறைவன் சொன்னார். "நீ என்னையே நினைத்தாலும் உன்னோடு முழு மனதும் என்னிடம் வரவில்லை! ஆனால் இந்த வேடன் காலையிலே இருந்து மாலை வரைக்கும் என்னை மட்டுமே நினைத்துக்கொண்டிருந்தான். தண்ணீர்கூட குடிக்காமல் முழு மனதோடு என்னை தேடினான். இதுதான் உண்மையான தேடல்! அதனாலே தான் அவனுக்குக் காட்சி கொடுத்தேன்!" என்றார். இந்தக் கதையிலேயிருந்து நாம் தெரிந்துகொள்ள வேண்டியது என்னவென்றால் எந்த ஒரு உண்மையைத் தேடினாலும் அப்படித் தேடுவது உண்மையான தேடலா இருக்கவேண்டும் என்பது தான்!

ஒரு திருவிழா கூட்டம் ஒரு பெண் கழுத்திலே இருந்த சங்கிலி திருட்டுப் போய்விட்டது. அந்தக் கும்பலிலே. திருடனை எல்லாரும் தீவிரமாக தேடிக்கொண்டிருக்கிறார்கள். மும்முரமாக தேடிக்கொண்டிருந்த ஒருவர் சொன்னார். "எவ்வளவுதான் உண்மையாகத் தேடினால்கூட அந்தத் திருடன் கிடைக்க மாட்டான் என்றுதான் எனக்குத் தோன்றுகிறது" என்றார். "எப்படி சொல்கிறீர்கள்?" என்று கேட்டார் பக்கத்திலே இருந்தவர். அவர் காதோட காதா இவர் சொன்னார். "இப்போது நாம் எல்லோரும் தேடிக்கொண்டிருக்கிறது என்னைத்தான்!" என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெங்காய இறக்குமதியை மட்டுப்படுத்துங்கள்

# யாழில் விவசாயிகள் போராட்டம்!

## மகஜரும் கையளிப்பு!

(யாழ்ப்பாணம்)

**நாட்டில் சின்ன வெங்காயத்தின் இறக்குமதியை குறைக்குமாறு வலியுறுத்தி அச்சுவேலி பத்தமேனி வெங்காய உற்பத்தியாளர்கள் யாழ்ப்பாண மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் (காணி) ஸ்ரீ மோகனிடம் மகஜர் ஒன்றை கையளித்துள்ளனர்.**



யாழ். மாவட்ட செயலகத்தின் முன்பாக நேற்று வெள்ளிக்கிழமை கவனயீர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்த விவசாயிகள், அதனைத் தொடர்ந்து மகஜரை கையளித்தனர்.

சின்ன வெங்காயச் செய்கையில் தொடர்ச்சியாக ஈடுபட்டு வரும் அச்சுவேலி பத்தமேனி வெங்காய சங்கத்தைச் சேர்ந்த விவசாயிகள் தம்மால் உற்பத்தி செய்யப்படும் சின்ன வெங்காயத்திற்கு நிர்ணயமான போதிய விலை கிடைக்காமையால் தாம் பாதிப்படைந்துள்ளதாக குறிப்பிட்டுள்ளனர்.

சின்ன வெங்காயத்தினை உற்பத்தி செய்து சந்தைப்படுத்துவது வரையிலான காலப் பகுதியில் அதிகளவான செலவினங்கள் தமக்கு ஏற்படுவதால் அதனை நிர்ணய விலைக்கு விற்க முடியவில்லை என்றும் அரசாங்கத்தினால் வெளிநாட்டில் இருந்து சின்ன வெங்காயம் இறக்குமதி செய்யப்படும் நிலை அதிகரித்துள்ளமையால் தமது உற்பத்திக்கான நிர்ணய விலை கிடைக்க வில்லை என குறிப்பிட்டனர்.

இதனால் அரசாங்கம் வெங்காய இறக்குமதியை மட்டுப்படுத்தி தமக்கான நிர்ணய விலையை கிடைக்கச் செய்ய வேண்டும் எனக் கோரி மகஜரை கையளித்தனர். (8-33)

## இளவாலை - சித்திரமேழி ஞானவைரவர் கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

இளவாலை-சித்திரமேழி அருள்மிகு ஞானவைரவர் ஆலய மகா கும்பாபிஷேகப் பெருவிழா எதிர்வரும் ஜூலை மாதம் 7 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணி முதல் 10.20 மணிவரையுள்ள சுப முகூர்த்த வேளையில் இடம்பெறவுள்ளது.

கும்பாபிஷேகத்திற்கு முன்னதாக நாளை ஞாயிற்றுக்கிழமை முதல் கர்மாரம்ப கிரியைகள் ஆரம்பமாகி எதிர்வரும் ஜூலை மாதம் 6 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிமுதல் மாலை 4 மணிவரை எண்ணெய்க்காப்பு சாத்துதல் நிகழ்வும் மறுநாள் திங்கட்கிழமை மகாகும்பாபிஷேகமும் இடம்பெற்று அதன்பின்னர் "சித்திரமேழி ஞானவைரவர் பக்தி பாமாலை" என்ற பாடல் இருவெட்டு வெளியீடும் இடம்பெறவுள்ளது.

அத்துடன் கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து 47 நாட்கள் மண்டலாபிஷேகம் நடைபெற்று 48 ஆம் நாள் மண்டல பூர்த்தி மகாசங்காபிஷேகமும் இடம்பெறவுள்ளது என ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (3)

## பளை பிரதேச வைத்தியசாலையின் குறைபாடுகள் நிவர்த்திக்கப்பட வேண்டும்

### ஒருங்கிணைப்புக்குழு கூட்டத்தில் தவிசாளர் சுரேன்

(தருமபுரம்)

பளை பிரதேச வைத்திய சாலையிலுள்ள குறை பாடுகள் நிவர்த்தி செய்யப்பட வேண்டும் என பச்சிலைப் பள்ளி பிரதேச சபையின் தவிசாளர் சுரேன், ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கோரிக்கை விடுத்தார்.

பச்சிலைப்பள்ளி பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் நேற்று பாராளுமன்ற உறுப்பினர்.க. இளங்குமரன் தலைமையில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

அதில் கருத்து தெரிவிக்கையில் அவர் மேற்கண்டவாறு கோரிக்கையினை முன் வைத்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சிறு வைத்தியங்களுக்கு கூட உரிய சிகிச்சை வழங்க முடியாமல் நோயாளர்கள் கிளிநொச்சி அல்லது சாவகச்சேரி வைத்தியசாலைக்கு மாற்றப் படுகின்றனர்.

எனவே இவை நிவர்த்தி செய்யப்பட வேண்டும். அத்துடன் சில சமயங்களில் வைத்தியர்கள், தாதியர்கள் அசமந்த போக்குடன் செயற்படுவதாகவும் இனிவரும் காலங்களில் இவ்வாறு நிகழாதிருக்க வைத்தியசாலை நிர்வாகம் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் தெரிவித்தார். (ஙி-8-316)

## மாணிக்கவாசகர் குருபூசை நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

அறிநெறிப் பாடசாலை நடத்தும் மாணிக்கவாசகர் குருபூசை நிகழ்வு நாளை ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 3 மணிக்கு காரைநகர் கிழவன் காடு கலாமன்ற மனோன்மணி கலையரங்கில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் அகில இலங்கை இளங்கோ கழக நிர்வாக உறுப்பினர் பரா.றமேஸ் சொற்பொழிவு நிகழ்த்தவுள்ளதுடன் ஈழத்துப் பண்ணிசைக் கலைஞர்களின் திருவாசகத் தேனிசை நிகழ்வும் இடம் பெறவுள்ளது.

அத்துடன் கலைமாமணி டாக்டர் எஸ்.எஸ்.குருஜீ தலைமையில் ஈழ நல்லூர் ஸ்ரீதேவி வில்லிசை குழுவினர் வழங்கும் "பட்டினத்தார்" வில்லிசை சிறப்பு நிகழ்ச்சியும் இடம்பெறவுள்ளது. (3)

(யாழ்ப்பாணம்)

சைவபாரிபாலனசபை நடத்தும் மாணிக்கவாசகர் குருபூசை தினம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு சைவபரிபாலன சபை ஆச்சிரம மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

செல்வி.நா.நீலாம்பிகை (சைவபரிபாலன சபை) தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யா/வண்ணை நாவலர் மகா வித்தியாலய அதிபர் க.கலியுகன் கலந்து சிறப்பிக்கவுள்ளதுடன் யா/வண்ணை நாவலர் மகா வித்தியாலயம் மற்றும் யா/இளையதம்பி இந்து வித்தியாலயம் ஆகிய இரு பாடசாலை மாணவர்களும் இந் நிகழ்வில் பங்குபற்ற வுள்ளனர்.

தொடர்ந்து நிகழ்வின் வரவேற்புரையினை பரீட்சை செயலாளர் வி.தயாபரன், தலைமையுரையினை செல்வி. நா.நீலாம்பிகையும், பிரதம விருந்தினர் உரையினை க.கலியுகன் வழங்கவுள்ளதுடன் நன்றியுரையினை சைவ பரிபாலன சபைச் செயலாளர் சே.செல்வராஜன் நிகழ்த்தவுள்ளார். அத்துடன் பாடசாலை மாணவர்களின் திருவாசகம் ஓதுதல், பேச்சு குழு இசை, பண்ணிசை, கவிதை போன்ற நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (3)

## மடு அன்னையின் ஆடி மாத திருவிழா

# விசேட கலந்துரையாடல்

(மன்னார்)

மடு அன்னையின் ஆடி மாதத் திருவிழா தொடர்பான விசேட கலந்துரையாடல் கடந்த 26 ஆம் திகதி வியாழக் கிழமை மதியம் மடுத் திருத்தல கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் ஏற்பாட்டில் மன்னார் மறை மாவட்ட ஆயர் மேதகு பேரருட்திரு கலாநிதி அந்தோனிப்பிள்ளை ஞானப் பிரகாசம் ஆண்டகை தலைமையில் இடம்பெற்றது.

இதன் போது மடு திருத்தல பரிபாலகர் அருட்தந்தை பெப்பி சோசை அடிகளார்,மன்னார் மறைமாவட்ட குரு முதல்வர் அருட்தந்தை கிறிஸ்து நேசன் அடிகளார் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

இதன் போது சுகாதாரம், போக்குவரத்து, குடிநீர், மின்சாரம்,பாதுகாப்புத் தொடர்பாக உரிய தரப்புடன் கலந்துரையாடப்பட்டு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதேவேளை கடந்த 23 ஆம் திகதி கொடியேற்றத்துடன் மடு அன்னையின் ஆடி மாத திருவிழா ஆரம்பமானது. தொடர்ந்து நவநாள் திருப்பலி தமிழ் சிங்கள மொழிகளில் ஒப்புக்கொடுக்கப்பட்டு வருகிறது.

அத்துடன் எதிர்வரும் 2 ஆம் திகதி காலை 6.15 மணிக்கு மறைமாவட்ட ஆயர்கள் இணைந்து திருவிழா திருப்பலியை கூட்டுத்திருப்பலியாக ஒப்புக்கொடுக்க உள்ளனர்.

இதில் நாட்டின் பல பாகங்களில் இருந்தும் பல இலட்சக்கணக்கான மக்கள் மடு அன்னையின் ஆசி பெற வருகை தர உள்ளமையினால் சகல விதமான ஏற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக மன்னார் மறைமாவட்ட ஆயர் தெரிவித்துள்ளார்.

மேலும் இந்த கலந்துரையாடலில், பிரதேச செயலாளர்கள், திணைக்கள தலைவர்கள், பொலிஸ், கடற்படை மற்றும் இராணுவ உயர் அதிகாரிகள் எனப் பலர் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (8-285)

## பரத நாட்டிய அரங்கேற்றம்

(யாழ்ப்பாணம்)

உடுவில்நாட்டியகலாக்ஷேத்திரா பரதநாட்டிய ஆசிரியை ரஜனி சிவநேசன் சிவநேசன் அவர்களின் மாணவியும் திரு. திருமதி சுகுணன் துஸ்யந்தி தம்பதிகளின் புதல்வியுமான செல்வி விஜியந்தி சுகுணன் அவர்களின் பரதநாட்டிய அரங்கேற்றம் இன்று சனிக்கிழமை மாலை 3 மணிக்கு யாழ்ப்பாணம் திருவள்ளுவர் பண்பாட்டு மைய கலையரங்கத்தில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக நாட்டிய சங்கல்பா கலை இயக்குநர், தேசிய விருதாளர் கலைமாமணி ஸ்ரீமதி. ஊர்மிளா சத்தியநாராயணன் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.(க-8)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 4

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 808





"இந்த அரண்மனையின் ஆவேசக்காரன் ஒருவன் இருக்கிறான். அவனைக் கூப்பிட்டு அனுப்பினேன் அவனை யாரோ நேற்றிரவு அடித்துப் போட்டு விட்டார்களாம். அவனுக்குப் பதிலாக அவன் மனைவி தேவராட்டி வந்தாள் அவள்தான் சொன்னாள்!" சீச்சீ! அதையெல்லாம் நீ நம்பாதே!"

"எனக்கும் நம்பிக்கைப் படவில்லை. வெறும் ஆவி வடிவமாயிருந்தால் தொட முடியாதல்லவா அக்கா!"

"ஆவியையும் தொட முடியாது உருவெளித் தோற்றத்தையும் தொட முடியாது. நீ ஏன் கேட்கிறாய்! உன் உள்ளத்தைக் கவர்ந்தவனை நீ நேற்றுத் தொட்டுப் பார்த்தாயா, என்ன?"

"அதுதான் ஒரே குழப்பமாயிருக்கிறது தொட்டுப் பார்த்தது போலவும் இருக்கிறது. ஆனால் வேறு சில விடயங்களை நினைத்துப் பார்த்தால் சந்தேகமாகவும் இருக்கிறது."

"நேற்று நடந்ததையெல்லாம் விவரமாகச் சொல்லடி, பெண்ணே! நான் உன் சந்தேகத்தை நிவர்த்தி செய்கிறேன்!"

"ஆகட்டும் அக்கா! நான் ஏதாவது முன் பின்னாக உளறினால் கேள்வி கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள்!" என்றாள் மணிமேகலை. பிறகு அவள் கூறினாள் "நேற்று நான் கிட்டத்தட்ட இதே நேரத்தில் இங்கே இருந்தேன். என் தமையன் சொல்லிப் போயிருந்தபடி தங்களுக்கு இங்கே வேண்டிய சௌகரியம் எல்லாம் பணிப்பெண்கள் சரியாகச் செய்திருக்கிறார்களா என்று கவனிப்பதற்காக வந்தேன். ஒரு முறை, இதோ இருக்கும் கண்ணாடியில் என் முகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தேன்!" "உன் அழகை நீயே பார்த்துக் கொண்டிருந்தாயாக்கும்"

"அப்படியொன்றும் இல்லை, அக்கா! என் முக இலட்சணம் எனக்குத் தெரியாதா, என்ன?"

"உன் முக லட்சணத்துக்கு என்ன குறைவு வந்தது? ரதியும் இந்திராணியும் மேனகையும் ஊர்வசியும், உன்னைப் பார்த்துப் பொறாமைப்பட மாட்டார்களா?" "அவர்கள் எல்லாரும் உங்கள் கால் தூசி பெறமாட்டார்கள் அக்கா!"

"சரி, சரி! மேலே சொல்! கண்ணாடியில் உன் முகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தாய்"

"அப்போது திடீரென்று இன்னொரு முகம் கண்ணாடியில் தெரிந்தது. என் முகத்துக்கு அருகில் தெரிந்தது."

"அது உன் காதலன் முகந்தானே!" ஆமாம் எனக்குத் தூக்கி வாரிப் போட்டது.

எதற்காகத் தூக்கி வாரி போட வேண்டும்? நீ தான் அடிக்கடி அவனுடைய முகத்தைக் கனவில் பார்ப்பதுண்டு என்று சொன்னாயே?

அதற்கும் இதற்கும் கொஞ்சம் வித்தியாசம் இருந்தது. கனவில் வரும் போது எதிரே சற்றுத் தூரத்தில் தெரியும். உருவெளித் தோற்றத்திலும் அப்படித்தான். ஆனால் இங்கே பின்னாலிருந்து சொல்லக் கூச்சமாயிருக்கிறது. பாதகமில்லை, சொல்லடி கள்ளி!

"பின்னாலிருந்து கன்னத்தில் முத்தமிட வருவதைப் போல் இருந்தது. திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தேன் ஒருவரும் இல்லை.

பிறகு கண்ணாடியிலும் அந்த முகம் தெரியவில்லை. எனக்கு ஒரு சந்தேகம் உண்டாயிற்று. (தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## பள்ளியில் திருட்டு



இரவு பன்னி ரண்டு மணிக்கு மேல் ஆகி விட்டது, ராமசாமியும், அவன் அப்பா, அம்மா, தங்கை, நால்வரும் அவர்கள் ஊருக்குப் பேருந்தில் வந்து இறங்கினர். பேருந்து நிலையத்தில் இருந்து பத்து நிமிடம் நடந்தால் போதும், அவர்கள் வீட்டுக்கு போய் விடலாம். நால்வரும் வேகமாக வீட்டை நோக்கி நடக்க ஆரம்பித்தார்கள்.

நேரம் பன்னிரண்டுக்கு மேல் ஆகி விட்டதால், தெருவெல்லாம் வெறிச்சென்று இருந்தது. வீதியில் விளக்கும் எரிய வில்லை. அவ்வப் பொழுது இவர்களை கடந்து செல்லும் வாகனங்களின் வெளிச்சத்தை வைத்து பாதையில் நடக்க ஆரம்பித்தார்கள்.

வழியில் இவர்கள், ராமசாமியும், அவன் தங்கையும் படித்துக் கொண்டிருக்கும் பள்ளியைத் தாண் டித்தான் போக வேண் டும். அந்த இருளில் நடக்கும் போதே ராமசாமியின் தங்கை அண்ணா நம்ம ஸ்கூலு என்று கை காட்ட ஆமாம், நாளைக்கு ஸ்கூலுக்குப் போக வேண்டும், சொல்லி விட்டு பள்ளி காம்பவுண்டை தாண்டி பார்வையை செலுத்தினான். அப் பொழுது யாரோ அந்த இடத்தை விட்டு நகர்வது போல் தெரிந்தது.

சட்டென நின்று உற்றுப் பார்த்தான், காம்பவுண்டைத் தாண்டி சிறிது தூரம் நடந்தால் முன்புறம் தலைமையாசிரியர் அறையும், பள்ளி அலுவலகமும் அதை ஒட்டி மற்றொரு அறையும் இருந்தது. அதன் பக்கத்தில் வலது இடது, பாதையின் வழியாக சென்றால் பின்புறம் பள்ளி கட்டடம் இருக்கும். இப்பொழுது இரு உருவங்கள் வலது புற பாதையை கடந்து காம்பவுண்ட் அருகே நகர்ந்து செல்வது தெரிந்தது. நன்றாக உற்று பார்த்தான். பள்ளி வாட்ச்மேனை இவனுக்கு தெரியும், அவருடைய உருவம் அந்த இரு உருவங்களில் ஒத்துப் போகவில்லை. என்ன செய்வது? யோசிக்கும் போது அவன் அப்பா அவனை கூப்பிடுவது கேட்டது. திடுக்கிட்டு நிமிர்ந்து பார்த்தான். அவன் அப்பாவும், அம்மாவும் தங்கையும் அவனை விட்டு நீண்ட தூரம் முன்னால் சென் றிருந்தார்கள். அங்கிருந்து அப்பா கத்தினார். ராமு சீக்கிரம் வா, அங்க எதுக்கு நின்று விட்டாய் இவன் சரி முதல்ல வீட்டுக்கு போவோம், அப்புறம் பாக்கலாம் என்று சொல்லி விட்டு வேகமாக அவர்களை நோக்கி சென்றான். காலையில் தூங்கி எழும் போதே அவனுக்கு பள்ளி இருளில் பார்த்த உருவங்கள் யாராய் இருக்கும் என்ற கேள்வியே மனதில் இருந்தது. வகுப்பில் அருகில் உட்கார்ந்திருக்கும் நண்பன் பாலுவிடம் நேற்று இரவு வரும் போது பள்ளிக்குள் இரு வரை பார்த்ததாக சொன்னான்.

பாலு யோசித்தான், யார் அந்நேரத்துக்கு உள்ளே இருந்திருப்பாங்க? நமது பிள்ளைகளை மாதிரி இருந்ததா? இல்லை பெரிய ஆட்கள் மாதிரி தெரிந்தது என்று சொன்னான் ராமசாமி. சரி இன்றைக்கு இரவு வேண்டுமென்றால் பார்த்திடலாமா? பாலு கேட்டவுடன் தயக்கத்துடன் பார்த்திடலாம் என்று சொன்னான். (தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மையான மக்களாட்சி மலர வேண்டுமானால் மனிதன் சிந்திக்க வேண்டும். -- சாக்கிரட்டீஸ்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

# உங்கள் தேவைக்கேற்ப ஆட்டி வைக்க இலங்கை ஐ.நா.வின் கைப்பாவை அல்ல

## ஐக்கிய மக்கள் சக்தி விசனம்

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் வோல்கர் டேர்க்கின் தேவைக்கு ஏற்ப ஆட்டி வைப்பதற்கு இலங்கை ஐ.நா.வின் கைப்பாவை அல்ல. உங்களது தேவைகளை நிறைவேற்றுவதற்காக இந்த அரசாங்கத்தை பயன்படுத்திக் கொள்ள முயற்சித்தால் அதற்கு நாம் ஒருபோதும் இடமளிக்கப் போவதில்லை என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜேசிறி தெரிவித்தார்.

களுத்துறையில் நேற்று வெள்ளிக்கிழமை (27) இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் வோல்கர் டேர்க்கின் வருகை மற்றும் அவரது யாழ் விஜயமானது அரசாங்கம் ஐ.நா.வின் தேவைக்கேற்ப செயற்படுகின்றது என்பதை உணர்த்தியுள்ளது.

இந்த அரசாங்கம் ஆட்சியமைப்பதற்கு பல்வேறு அரச சார்பற்ற அமைப்புக்கள் பாரிய உதவி, ஒத்துழைப்புக்களை வழங்கின.

30 ஆண்டு கால யுத்தத்தின் நிறைவில் இராணுவ வீரர்கள் மீது குற்றச்சாட்டுக்களை சுமத்துவதற்குப் பலரும் முயற்சித்தனர். குறிப்பாக புலம்பெயர் தமிழர்களின் தேவைக்காகவே இந்த முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டன.

அந்த வகையில் தற்போது அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படும் செயற்பாடுகள் அந்த தேவைகளை நிறைவேற்றுவதற்கானவையா என்ற சந்தேகமும் எழுகிறது.

மனித உரிமைகள் உயர்ஸ்தானிகரிடம் ஒரு விடயத்தைக் கூறிக் கொள்ள விரும்புகின்றோம். நீங்கள் இலங்கைக்கு விஜயம் செய்வதோ, யாழ்ப்பாணத்துக்கு செல்வதோ பிரச்சினையல்ல.

ஆனால் உங்களது தேவைகளை நிறைவேற்றுவதற்காக இந்த அரசாங்கத்தை பயன்படுத்திக் கொள்ள முயற்சித்தால் அதற்கு நாம் தயாராக இல்லை.

இலங்கை பிரஜைகள் என்ற ரீதியில் இந்நாட்டில் இராணுவ வீரர்கள் அமைதியையும் ஒற்றுமையையும் நல்லிணக்கத்தையும் நிலைநாட்டுவதற்காகவே போராடினர் என்பதை நாம் அங்கீகரிக்கின்றோம்.

எனவே அரச சார்பற்ற அமைப்புக்களின் தேவைகளுக்காக நாட்டை ஆட்டி வைப்பதற்கு இலங்கை ஐ.நா.வின்கைப்பாவை இல்லை என்பதை உயர்ஸ்தானிகர் வோல்க்கருக்கு நினைவுபடுத்துகின்றோம் என்றார். (ம-7)

# குருசேத்திரத்து கீதோபதேசம் உணர்த்தும் தத்துவத்தை அறிமினே

ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும் என் கிறது நம் தமிழ் மொழி.

ஆம், பகை என்பதை நாம் வளர்ப்போமாயின், அது அழிவேயன்றி வேறில்லை.

அதாவது எல்லோரையும் பகைப்பது மிகவும் மோசமான செயல்.

இங்கு மோசமான செயல் என்பது அழிவுக்கான வேலைப்பாடு எனப் பொருள் கொள்ளல் வேண்டும்.

இங்குதான் இதிகாசங்கள் நமக்கு வழிகாட்டுகின்றன.

குருசேத்திரத்தில் போர் ஆரம்பமாகப் போகிறது. போர்க்களத்தில் நிற்கின்ற ஆசான்களை, உறவுகளை கண்ணுற்ற அருச்சுனன் அந்தோ! இவர்களைக் கொன்று ஆட்சியைக் கைப்பற்றுவதா? அப்படியொரு ஆட்சி தேவைதானா என மனச்சோர்வு கொள்கின்றான்.

இங்குதான் கண்ண பரமாத்மா அருச்சுனனுக்கு கீதோபதேசம் செய்கிறார்.

இங்கு கீதோபதேசம் என்பது அருச்சுனனைத் தெளிவுபடுத்துகின்ற செயலாகும்.

உன் கடமை எதுவோ அதை நீ செய்தாக வேண்டும் என்ற தத்துவத்தை உள்வாங்கிய அருச்சுனன், எதிர்தரப்பில் இருக்கக்கூடிய தனது குருவாகிய வீஷ்மரிடம் செல்கின்றான்.

வீஷ்மரிடம் சென்ற அருச்சுனன் அவரை வீழ்ந்து வணங்க, வெற்றி உமக்கே என வீஷ்மர் ஆசீர்வதிக்கின்றார்.

இங்குதான் இரண்டு விடயங்களை குருசேத்திரக் களம் நமக்குக் கற்றுத் தருகிறது. அதில் ஒன்று தெளிவைப் பெறுதல்.

ஆம், எதிலும் தெளிந்த அறிவோடு இருப்பது மிகவும் முக்கியமானது.

இதை நம் சமகாலத்துச் சூழ்நிலைக்கு ஏற்றால் போல் கூறுவதாயின், அரசியல் தெளிவை நாம் கட்டாயம் பெற்றிருக்க வேண்டும். அதற்காக அரசியல் தெளிவுபடுத்தல்களை நாம் செய்திருக்க வேண்டும்.

இந்த இரண்டும் நம்மிடம் முழுமையற்றிருந்தமையே செம்மணிப் புதைகுழியில் ஏற்பட்ட சலசலப்புக்கு மூலகாரணமாயிற்று.

தவிர, கௌரவர் சேனையின் தளபதியாக நிற்கின்ற வீஷ்மரை அருச்சுனன் சென்று அவரிடம் ஆசி பெறுவதற்குள், எதிர்த்தரப்பிலும் நமக்கு ஆதரவானவர்கள் இருக்க வேண்டும் என்ற உண்மை உணர்த்தப்படுகிறது.

இங்குத்தான் நம்மிடம் உள்ள அரசியல் தெளிவின்மை அனைவரையும் பகைப்பதில் ஆர்வத்தை ஏற்படுத்துகிறது.

ஆம், செம்மணிக்கு வருகை தந்த அமைச்சர் சந்திரசேகரன், தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் ஆகியோருக்கு செம்மணியில் எதிர்ப்பு காட்டப்பட்டிருந்தது. ஆனால் இது அங்கு அர்த்தமற்றது.

இங்குதான் ஒரு விடயத்தை நாம் கவனிக்க வேண்டும். அமைச்சர் சந்திரசேகரன் அநுர அரசாங்கத்தின் ஒரு பிரதிநிதித்துவம். அதேபோல சாணக்கியன் மட்டக்களப்பு தமிழ் மக்களின் பிரதிநிதித்துவம். இந்த உண்மை உணரப்பட்டிருந்தால், செம்மணிப் போராட்டம் இன்னும் பயனுறுதிமிக்கதாக இருந்திருக்கும்.

# புலி அமைப்பைச் சார்ந்தவர்களுடனேயே ஐ.நா. ஆணையாளர் பேச்சுவார்த்தை

## விமல் வீரவன்ச குற்றச்சாட்டு

(கொழும்பு)

விடுதலைப்புலிகள் அமைப்பை சார்ந்தவர்களுடனேயே ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார் எனத் தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச குற்றம் சுமத்திள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர்,

ஐ.நா மனித உரிமை ஆணையாளர் இலங்கைக்கு வருவதற்கான பாதையை தற்போதைய அரசாங்கமே உருவாக்கியுள்ளது.

ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் போன்ற உயரதிகாரிகள் இலங்கைக்கு வருவது இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை முன்னெடுப்பதற்காகும்.

இவ்வாறான விடயங்கள் எதிர்க்கப்பட வேண்டும். ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் தெற்கில் எதையும் பேசவில்லை மாறாக யாழ்ப்பாணத்திற்கு சென்று அங்கு இறந்தவர்களுக்கு மலர்தூவி அஞ்சலி செலுத்தியுள்ளார் எனக் குறிப்பிட்டுள்ளார். (ம-7)

# விடுதலைப் புலிகளின் மனநிலையில் வடக்கு, கிழக்கில் சிலர் வாழ்கின்றனர்

## சரத் பொன்சேகா தெரிவிப்பு

வடக்கு, கிழக்கில் விடுதலைப் புலிகளின் மனநிலையில் வாழ்ந்த சிலர் இன்னும் இருப்பதாக முன்னாள் இராணுவத் தளபதி பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

வடக்கு, கிழக்கில் காணி விடுவிப்பு மற்றும் இராணுவ முகாம் அகற்றுவது தொடர்பில், நேற்று ஊடகவியலாளர்களால் கேட்கப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கும் போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அதன்போது மேலும் கருத்து வெளியிட்ட அவர், புலிகளின் நிகழ்ச்சி நிரல்கள் குறித்து கனவு காணும் கூட்டமொன்று இன்னும் இருக்கிறது. அனைத்து மக்களும் அல்ல.

புலிகளுக்கு ஆதரவளித்த அரசியல்வாதிகள் இருக்கின்றனர். அத்துடன் புலிகளை மீண்டும் எழுச்சி பெறவைக்க முடிந்த அனைத்தையும் செய்யும் கூட்டமொன்று உள்ளது.

இவ்வாறான அச்சுறுத்தல்கள் இருக்கும் போது, யுத்தமொன்று உருவான பின்பு இராணுவ முகாம்களை நிறுவுவது தொடர்பில் சிந்திக்காமல் முன்னதாகவே தூர நோக்குடன் பாதுகாப்பு அச்சுறுத்தல் ஏற்படாதவாறு இராணுவ முகாம்கள் நிறுவப்பட வேண்டும்.

யாழ்ப்பாணத்திலுள்ள பாதுகாப்பை பலவீனப்படுத்தினால் அது யாழ்ப்பாண மக்களுக்கே பாதகமாக அமையும். அங்குள்ள மக்களே அதனை பற்றி சிந்திக்க வேண்டும்.

மனிதர்களைக் கொலை செய்த ஆவா என்ற பாதளா கும்பல் அங்கு இருந்தது. இந்தியாவில் இருந்து கேரள கஞ்சா உள்ளிட்ட பொருட்கள் யாழ்ப்பாணத்திற்கு வருகிறது.

அத்தோடு பாதுகாப்பு வீதித்தடைகளை அகற்றினால் தெற்கிலிருந்து கொலைகளை செய்து விட்டு பாதாளக்குழுக்கள் வடக்கிற்கு ஊடுருவக் கூடும். அரசியல் இலாபத்திற்காக சில அரசியல்வாதிகள் இராணுவ முகாம்களை அகற்றுமாறு தெரிவித்திருந்தாலும், ஒரு சில இடங்களில் மக்கள் பாதுகாப்பு முகாம்கள் இருப்பதற்கு விருப்பப்படுகிறார்கள்.

சிங்கப்பூர் மற்றும் சுவிட்சர்லாந்தில் இருக்கும் நிலை இங்கில்லை என்பதைப் புரிந்து கொண்டு தற்போதுள்ள ஆட்சியாளர்கள் செயற்பட வேண்டும் என்றார். (ம-7)

# சாவகச்சேரியில் களவாடப்பட்ட மோட்டர்களுடன் இருவர் கைது

சாவகச்சேரி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பல்வேறு பகுதிகளில் களவாடப்பட்ட 4 மோட்டர்களுடன் இரண்டு சந்தேக நபர்களை சாவகச்சேரிப் பொலிஸார் நேற்றுக் கைது செய்துள்ளனர்.

பாடசாலை, ஆலயம், வீடு என மூன்று இடங்களில் தண்ணீர் மோட்டர்கள் திருடப்பட்டுள்ளதாக உரிமையாளர்களால் வழங்கப்பட்ட முறைப்பாட்டுக்கமைய விசாரணைகளை முன்னெடுத்த சாவகச்சேரி பொலிஸாரால் சரசாலை மற்றும் மட்டுவில் பகுதியைச் சேர்ந்த 23 வயதான இரண்டு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர்.

அவர்களிடம் மேற்கொண்ட விசாரணைகளில் சரசாலை காட்டுப்பகுதியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 4 மோட்டர்களையும் மீட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (ம-7,30)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலநடை வளர்ப்பு-பகுதி 3

# சுத்தமான பாலுற்பத்தியைச் செய்வோம்



Dr. எஸ்.கிருபானந்தகுமாரன் (MVSc)
கால்நடை வைத்தியர்.

பால் அதிகளவான ஊட்டச் சத்துக்களைக் கொண்ட உயிர்த் திரவமாகும். கறந்த பால் விரைவாக பழுதடையக் கூடியது. நுண்ணாங்கிகளின் செயற்பாட்டுக்கு மிகச்சிறந்த ஊடகமாகும். இந்த நுண்ணாங்கிகள் பெருகி பாலின் கட்டமைப்பைப் பாதிக்கத் தொடங்குவதால் பாலை அறை வெப்பநிலையில் நீண்ட நேரம் வைத்திருக்க முடியாது. பாலைக் கறக்கும் பண்ணையாளர்கள் பசுவிலிருந்து கறந்து சில மணி நேரங்களிலேயே பாவனைக்கு பயன்படுத்த வேண்டும் அல்லது முறையாக களஞ்சியப்படுத்த வேண்டும். பாடுபட்டு பாலை உற்பத்தி செய்துவிட்டு பழுதடைய விடுதல் பெரும் நட்டத்தையே அவர்களுக்குத் தருகிறது.

பாலை நுண்ணாங்கிகள் மாத்திரம் பழுதடையச் செய்வதில்லை. நுண்ணுயிர் கொல்லிகள், மதுவ நஞ்சுகள், கலப்படங்கள், சூழல் மாசுகள் எனப் பல காரணிகள் பங்களிப்பு செய்கின்றன. முடிந்த வரை இந்த காரணிகள் பாலைப் பாதிப்படையாமல் செய்ய வேண்டும். இதைத்தான் சுத்தமான பாலுற்பத்தி என்கிறோம். பாலுற்பத்தியை அதிகரிக்கப் முயலும் பலர் உற்பத்தி செய்யப்பட்ட பாலை பாதுகாப்பது தொடர்பாக கவனிப்பதில்லை. இது மனித உணவுப் பாதுகாப்புடன் தொடர்புபட்டது என்பதை சகலரும் மறந்து போய்விடுகிறோம்.

**பாலைப் பாதிக்கும் காரணிகளை ஆராய்வோம்.**

1. சுகாதாரமற்ற பால் கறத்தல் முறைகள் - பால் கறக்குமிடம், மாடு, பால் கறப்பவர் போன்ற காரணிகள் அசுத்தமாக இருக்கும் போது பால் பழுதடைகிறது. இதன்போது சேரும் அழுக்குகள், நுண்ணாங்கிகள் பாலை அடைந்து அதனை பழுதடையச் செய்யலாம்.

2.மாடுகளுக்கு ஏற்படும் நோய்கள் - மடியழற்சி போன்ற நோய்கள் காரணமாக பால் பழுதடைகிறது. இதன்போது பாலிலுள்ள கலங்களின் (somatic cell count) எண்ணிக்கை அதிகரிக்கிறது. இது பாலின் தரத்தை அளவிடும் முக்கிய குறிகாட்டியாகும். நோயுள்ள மாட்டின் பால் ஏனைய மாட்டின் பாலுடன் கலக்கும் போது அந்தப் பாலும் பழுதடைகிறது. இலங்கையில் மாடுகள் நோயுறும் போது சிகிச்சைக்கு பாவிக்கப்படும் நுண்ணுயிர் கொல்லிகளின் மீள் பெறுகை காலம் தொடர்பாக முறையான நடைமுறை பின்பற்றப்படுவதில்லை. இந்த மருந்துகள் பாலின் மூலம் மனிதனை அடைந்து பல பாதிப்புக்களை ஏற்படுத்தலாம்.



3. பாலை முறையாக களஞ்சியப்படுத்தாமை - கறக்கும் பாலை தகுந்த வெப்பநிலையில் சேமிக்காமல் விட்டால் நுண்ணாங்கிகள் பெருகி பால் பழுதடையும். மேலும் பாலை விரைவாகவும் சரியான பாதுகாப்பு முறைகள் இல்லாமல் கொண்டு போனாலும் பழுதடையும். இலங்கையின் கிராமங்களில் கறக்கப்படும் பால் பதனிடும் நிலையத்தை அடைவது பரவலாக அவதானிக்கப்படுகிறது. இதனால் கணிசமான அளவு பால் விரயமாகிறது. கறக்கும், சேமிக்கும் பாத்திரங்களின் சுத்தம் மிக அவசியம். பல இடங்களில் வெளிக்களங்களில் பால் கறக்கப் பயன்படும் பாத்திரங்கள் முறையாக பராமரிக்கப்படுவது கிடையாது. இதனாலும் பால் கெட்டுப்போகிறது.

4.சில இரசாயனப் பதார்த்தங்களின் சேர்வை / கலப்படம் - சுத்தப்படுத்தும் திரவங்கள், களை கொல்லிகள், கிருமி நாசினிகள் போன்றவையும் மாடுகளுக்கு பயன்படுத்தும் நுண்ணுயிர் கொல்லிகள், குடற்புழு நீக்க மருந்துகளும் பாலின் தன்மையை பாதிக்கலாம். பாலின் உள்ளடக்கத்தை மாற்றவல்ல தண்ணீர், யூரியா, சீனி போன்றவையும் பாலைப் பாதிக்க வல்லன.

5. சுகாதாரமற்ற தண்ணீர் - பாத்திரங்கள், கறவை இயந்திரங்கள், கொட்டகைகள், மாடுகள் போன்றவற்றை கழுவவும் மாடுகள் குடிக்கவும் சுத்தமான தண்ணீர் தேவை. இல்லாது போனால் பாலுற்பத்தியும் மாடுகளின் சுகாதாரமும் பாதிக்கப்படும்.

6.பாலின் தரத்தை அடிக்கடி பரீட்சிக்காமை - பாலின் தரம், பாலின் உள்ளீடுகள் (புரதம், கொழுப்பு) நுண்ணாங்கிகளின் அளவு, பாலின் கலங்களின் அளவு [somatic cells], தன்மை, கலப்படங்கள் தொடர்பாக அடிக்கடி பரிசோதனைகளைச் செய்யாமல் போனால் தரம் குறைந்த பால் சந்தைக்கு வரக்கூடும். இது மொத்தப் பாலின் தரத்தையும் பாதிப்படையச் செய்யும்.

இப்படியான காரணிகளை விலாவரியாக ஆராய்ந்து அவற்றை சீர்செய்வதன் மூலம் சுத்தமான பாலுற்பத்தியை செய்ய முடியும்.



# 28.06.2025 இன்று சனிக்கிழமை ஈழத்துச் சிதம்பரம் மாணிக்கவாகசர் மடாலயத்தில் திருவாசக முற்றோதலும், குருபூசையும், மாகேஸ்வரபூசையும்



திருவாகசம் ஓதுவோம் சிறந்த குரு மாணிக்கச் சுவாமிகளை எம்முள்ளத்தில் தொழுதல் செய்வோம். முக்தி பெறும் அழகான நெஞ்சமே! மகம் நட்சத்திரம் எல்லாம் தரும். ஒவ்வொரு மாதம் மகம் நட்சத்திரத்தில் திருவாசகம் ஓதுவோம்
"முத்திநெறி அறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்
பத்திநெறி அறிவித்து" அன்பே சிவம் நற்பேற்றினைப் பெறுவோம் **நடராயன் துதியும், சிதம்பரம் கூத்தன் திருப்புகழும் பிரதி எடுத்துத்தினம் ஓதுவோம்.**

நடராஜர் துதி

சீராருஞ் சதுர்மறையும் தில்லைவா ழந்தணரும்
பாராரும் புலிமுனியும் பதஞ்சலியும் தொழுது ஏத்த
வாராரும் கடல்புடைசூழ் வையமெலாம் ஈடேற
ஏராரு மணிமன்றுள் எடுத்ததிரு வடிபோற்றி.

சிதம்பரம் அருள்மிகு திருப்புகழ் எண் 472

அண்டம் முதலான உலகங்கள் புகழும் எந்தையே காரைநகர் ஊராம் திண்ணபுரம் ஈழத்துச் சிதம்பரம் திண்ணாபுரத்தில் ஆடுகின்ற நடராஜப் பெருமானுக்குத் தம்பிரானே அன்புருக அருள்வாயே!

நஞ்சினைப் போலுமன வஞ்சகக் கோளர்களை
நம்புதற் றீதெனநி ...... னைந்துநாயேன்
நண்புகப் பாதமதி லன்புறத் தேடியுனை
நங்களப் பாசரண ...... மென்றுகூறல்
உன்செவிக் கேறலைகொல் பெண்கள்மெற் பார்வையைகொல்
உன்சொலைத் தாழ்வுசெய்து ...... மிஞ்சுவாரார்
உன்றனக் கேபரமும் என்றனக் கார்துணைவர்
உம்பருக் காவதினின் ...... வந்துதோணாய்
கஞ்சனைத் தாவிமுடி முன்புகுட் டேயமிகு
கண்களிப் பாகவிடு ...... செங்கையோனே
கண்கயற் பாவைகுற மங்கைபொற் றோடமுவு
கஞ்சுகப் பான்மைபுனை ...... பொன்செய்தோளாய்
அஞ்சவெற் பேழுகடல் மங்கநிட் டூரர்குலம்
அந்தரத் தேறவிடு ...... கந்தவேளே
அண்டமுற் பார்புகழ மெந்தைபொற் பூர்புலிசை
அம்பலத் தாடுமவர் ...... தம்பிரானே.

விஷம் போல மனத்தில் வஞ்சகம் கொண்டுள்ளவர்களை நம்புதல் கெடுதலாகும் என்று நினைத்து அடியேன் முருகா உன் மீது நண்பு பெருக திருவடிகளில் அன்பு பொருந்த உன்னைத்தேடி உன்னை **"எங்கள் அப்பா சரணம்"** என்று ஓலமிடுகின்றேன். அந்தக் கூச்சல் உன் காதில் ஏறவில்லையா! தேவசேனை, வள்ளி எனும் அன்பு நாச்சியார்களின் மேல் உன் கண் பார்வை உள்ளதால் கேட்கவில்லையா! உனக்கே பாரமாகும்; **எனக்கு வேறு யார் துணைவர் ஊர்;** ஒருவரும் இல்லையே; அன்று தேவர்களுக்கு நீ உற்ற துணையாய் ஆனது போல **ஈழத்துச்சிதம்பரம் ஆலயம் கும்பாபிசேகமும், திருவிழாவும் சிறப்பும், குடமுழுக்கும் காண என் முன்னம் வந்துதோன்றி உலகங்கள்** போற்றும், ஈழத்தில் அம்பவி முருகர் தரிசித்து ஆலயத்திருப்பணிகள் நிறைவேற்றி முத்தி அடைந்த சிவப்பேற்றினை, நாமும் காலம் தாழ்த்தாது, திருப்பணிகளை பூர்த்தி செய்து சிவநெறியில் வழிபட்டு திருமுறைகள், திருவாசகம் ஓதியும் சிவப்பேறாகிய தரிசனம் பெற முத்தி அடைவோம்.

உன்னால் இருப்பது பொய் போவது மெய் என்றெண்ணி நெஞ்சே
ஒருத்தருக்கும் தீங்கினையுன் னாதே - பருத்ததொந்தி
நம்மது என்று நாம்மிருப்ப நாய்நரிகள் பேய் கழுகு
தம்மது என்று தாம் இருக்கும் தான்".

(பட்டனத்தார் 17)

உடம்பு உயிர் எடுத்ததோ உயிர் உடம்பு எடுத்ததோ
உடம்பு உயிர் எடுத்தபோது உருவம் ஏது செப்புவீர்
உடம்பு உயிர் எடுத்தபோது உயிர் இறப்பது இல்லையே
உடம்பு மெய் மறந்து கண்டு உணர்ந்து ஞானம் ஓதுமே!!!

(சிவவாக்கியம் 87)

சுத்த நெஞ்சமே! சற்குரு மலரடி தொழவகை கேட்பாயேல்
பத்த னாகியே மானாபி மானமும் பற்றற விட்ட நீ
குற்ற மேதுமற் றெல்விடங் காண்கினுங் கூறுடன் களிப்புற்றும்
பற்றுமாகிய திருவடி கதியெனப் பண்புடன் பணிவாயே

(சிவானந்த போதம்)

"நானேயோ தவம் செய்தேன்? சிவாயநம எனப் பெற்றேன்! திருவாசகத்தின் துணை கொண்டு திருப்பணி முயற்சியை மேற்கொள்வது சாலவும் சிறந்தது. அம்பலவி முருகர் திருவாசகத் துணையுடன் திருப்பணி செய்து முத்தி அடைந்தார்-முன்னோர் காட்டிய பாதையில் நாமும் திண்ணபுரம் கூத்தன் தரிசிப்போம் முத்திப்பேறு அருள்வல்லது என்பது கருத்து.



**க.கு.க.சிவபாலன்,**
**போசகர்,**
**ஈழத்துச்சிதம்பரம் மாணிக்கவாசகர் மடாலயம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## போதை...

பொலிஸ் விசேட அதிரடிப் படையினரின் சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது 23 வயதுடைய இளைஞர் ஒருவரே இவ்வாறு 60 போதை மாத்திரைகளுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் பாரப்படுத்தப்பட்டுள்ளார்.

விசாரணைகளின் பின்னர் அவரை மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,104)

## மோட்டார்...

வைத்தியசாலைக்கு அருகாமையில் தனது மகனுடன் மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்தபோது திடீர் என துவிச்சக்கரவண்டி ஒன்று குறுக்கிட முற்பட்டநிலையில் சடுதியாக மோட்டார் சைக்கிளை நிறுத்த முற்பட்டபோது குறித்த பெண் கீழே விழுந்து மயங்கிய நிலையில் ஊர்காவற்றுறை வைத்தியசாலைக்குக் கொண்டு சென்று மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டிருந்த நிலையில் நேற்று வெள்ளிக்கிழமை (27) சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இம் மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் விசாரணைகளை மேற்கொண்டார். (ம-7,60,104)

## தனியார் போக்கு...

முன்னெடுக்கப்படவுள்ளதாக அந்த சங்கத்தின் தலைவர் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில், நேர அட்டவணையில் ஏற்பட்ட குழப்பம் காரணமாக இலங்கை போக்குவரத்து சபையின் பணியாளர்களுக்கும் தனியார் பேருந்து உரிமையாளர்களுக்கும் இடையே நேற்று முறுகல் ஏற்பட்டது.

இதனையடுத்து, பொலிஸார் வரவழைக்கப்பட்டு நிலைமை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது.

யாழ்ப்பாணம் மத்தியப் பேருந்து நிலையத்தில் சட்டவிரோதமாக அத்துமீறிய சேவைகள் இடம்பெறுவதாக இரு தரப்பினரும் பரஸ்பரம் குற்றம் சுமத்தி வருகின்றனர். (ம-7)

## வவுனியா வடக்கு...

டுள்ளார்.

வவுனியா வடக்கு பிரதேச சபைக்கான தவிசாளர், உபதவிசாளர் தெரிவுகள் வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் திருமதி தேவநந்தினி தலைமையில் சபையின் ஒன்றுகூடல் மண்டபத்தில் நேற்று மாலை நடைபெற்றது.

இதன்போது தவிசாளர் ஒருவரை பிரேரிக்குமாறு கோரப்பட்ட நிலையில் தமிழரசுக் கட்சி சார்பில் தி.கிருஸ்ணவேணி பிரேரிக்கப்பட்டார். தேசிய மக்கள் சக்தி சார்பில் ஞானமுத்து அகிலன் பிரேரிக்கப்பட்டார்.

தவிசாளராக இருவரது பெயர்கள் பிரேரிக்கப்பட்டமையால் வாக்கெடுப்பின் மூலம் அதனை தெரிவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அந்தவகையில் வாக்கெடுப்பை இரகசியமாகவா அல்லது பகிரங்கமாகவா நடத்துவது என ஆணையாளரால் கோரப்பட்டது

இதன்போது தெரிவுகளை இரகசியமாக நடத்துமாறு தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர்கள் கோரிக்கை முன்வைத்தனர். அல்லது இரகசிய வாக்கெடுப்பா? அல்லது பகிரங்க வாக்கெடுப்பா? என்பதை இரகசிய வாக்கெடுப்பின் மூலம் தெரியுமாறு கேட்டனர். அதற்கு ஆணையாளர் மறுப்புத் தெரிவித்த நிலையில் தேசிய மக்கள் சக்தி மற்றும் இலங்கை தொழிலாளர் கட்சியின் இரு உறுப்பினர்கள் என 8 பேர் சபையில் இருந்து வெளிநடப்புச் செய்திருந்தனர்.

சபையில் மீதம் 15 உறுப்பினர்கள் இருந்த நிலையில் அவர்கள் அனைவரும் தெரிவுகளை பகிரங்கமாக நடத்துமாறு வாக்களித்திருந்தனர். பெரும்பான்மை வாக்குகளின் அடிப்படையில் தவிசாளர் தெரிவு பகிரங்கமாக நடத்தப்பட்டது.

அந்தவகையில் தவிசாளராகப் பெயர் பிரேரிக்கப்பட்ட கிருஸ்ணவேணிக்கு 15 வாக்குகள் ஆதரவாக கிடைக்கப்பெற்றது. அவருக்கு தமிழரசுக் கட்சியின் 5 வாக்குகளும் சங்கு கூட்டணியின் 3 வாக்குகளும் ஐக்கிய மக்கள் சக்தியின் 2 வாக்குகளும் அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் 4 வாக்குகளும் சர்வஜன அதிகாரத்தின் ஒரு வாக்குமாக 15 வாக்குகள் ஆதரவாக கிடைத்தது.

வெற்றி பெறுவதற்கு 12 உறுப்பினர்களின் ஆதரவு போதுமான நிலையில் 15 வாக்குகள் கிடைக்கப்பெற்ற கிருஸ்ணவேணி புதிய தவிசாளராக தெரிவு செய்யப்பட்டார்.

இதனையடுத்து உப தவிசாளருக்கான தெரிவு இடம்பெற்றது. உப தவிசாளராக அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் உறுப்பினர் விநாயகமூர்த்தி சஞ்சுதன் அவர்களின் பெயர் பிரேரிக்கப்பட்டது. உப தவிசாளராக வேறு நபர்களின் பெயர்கள் பிரேரிக்கப்படாத நிலையில் சஞ்சுதன் போட்டியின்றி உபதவிசாளராக தெரிவு செய்யப்பட்டார். (ம-7,250)

## வவுனியா தெற்...

தெரிவாகியுள்ளார்.

வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபைக்கான தவிசாளர் ,உபதவிசாளர் தெரிவுகள், வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் திருமதி தேவநந்தினி தலைமையில், சபையின் ஒன்றுகூடல் மண்டபத்தில் நேற்றுக் காலை நடைபெற்றது.

தவிசாளர் தெரிவுக்காக தமிழரசுக் கட்சியின் பாலேந்திரன் மற்றும் தேசிய மக்கள் சக்தியின் கார்த்தீபன் ஆகியோரது பெயர்கள் முன்மொழியப்பட்டது.

இதன்போது தெரிவுகளை இரகசியமாக நடத்துமாறு தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர்கள் கோரிக்கை முன்வைத்தனர். அதற்கு ஆணையாளர் மறுப்பு தெரிவித்த நிலையில் தேசிய மக்கள் சக்தி, இலங்கைத் தொழிலாளர் கட்சி மற்றும் சுயேட்சை குழு உறுப்பினர்கள் 9 பேர் வெளிநடப்பு செய்திருந்தனர்.

சபையில் மீதம் 18 உறுப்பினர்கள் இருந்த நிலையில் அவர்களில் 17 பேர் தெரிவுகளை பகிரங்கமாக நடத்துமாறு வாக்களித்திருந்தனர்.

பெரும்பான்மை வாக்குகளின் அடிப்படையில் தவிசாளர் தெரிவு பகிரங்கமாக நடத்தப்பட்டது.

அந்தவகையில் தவிசாளராக பெயர் பிரேரிக்கப்பட்ட பாலேந்திரனுக்கு ஆதரவாக 17 வாக்குகள் கிடைக்கப்பெற்றது.

அவருக்கு தமிழரசுக் கட்சியின் 5 வாக்குகளும் சங்கு கூட்டணியின் 3 வாக்குகளும் ஐக்கிய மக்கள் சக்தியின் 3 வாக்குகளும் ஜனநாயகத் தேசிய கூட்டணியின் 2 வாக்குகளும் ஈபிடிபியின் ஒரு வாக்கும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஒரு வாக்குகளும் சர்வஜன அதிகாரத்தின் ஒரு வாக்கும் சுயேட்சைக் குழுவின் ஒரு வாக்குமாக 17 வாக்குகள் ஆதரவாக அளிக்கப்பட்டது. வெற்றி பெறுவதற்கு 14 உறுப்பினர்களின் ஆதரவு போதுமான நிலையில் 17 வாக்குகள் கிடைக்கப் பெற்ற பாலேந்திரன் புதிய தவிசாளராக தெரிவு செய்யப்பட்டார்.

இதனையடுத்து உப தவிசாளருக்கான தெரிவு இடம்பெற்றது. உப தவிசாளராக சங்குக் கூட்டணியின் பாலசுப்பிரமணியம் கோணேஸ்வரியின் பெயர் பிரேரிக்கப்பட்டது.

உபதவிசாளராக வேறு நபர்களின் பெயர்கள் பிரேரிக்கப்படாத நிலையில் கோணேஸ்வரி உபதவிசாளராக தெரிவு செய்யப்பட்டார்.

இதேவேளை தமிழ் மக்கள் கூட்டணியின் ஒரு உறுப்பினர் தவிசாளர் தெரிவின்போது நடுநிலைமை வகித்திருந்தார். (ம-7,250)


மஹஜன சம்பத — திகதி 2025.06.27 — சீட்டிழுப்பு இலக்கம் 5873 — D 8 4 5 2 6 3 — அத சம்பத D 5 2 6 3 — சீட்டிழுப்பு இலக்கம் 0448

தன நிதானய — திகதி - 2025.06.27 — சீட்டிழுப்பு இலக்கம் - 1903 — A 38 53 57 79 A — 21978

மெகா பவர் — திகதி 27/06/2025 — சீட்டிழுப்பு இலக்கம் 2221 — U 24 14 39 43 54

ஜய — திகதி 2025.06.27 — சீட்டிழுப்பு இலக்கம் 0141 — B 4 3 4 2

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 4115 — சீட்டிழுப்பு திகதி 27.06.2025 — C 42 55 62 74 — C

HANDAHANA — உத்தியோகபூர்வ முடிவுகள் — சீட்டிழுப்பு திகதி 2025.06.27 — சீட்டிழுப்பு இலக்கம் 1182 — கடகம் 12 25 35 51 கடகம் — 20052 — 06

உத்தியோகபூர்வ முடிவுகள் — சுபிரி தன சம்பத — 27.06.2025 — வெற்றி வாரம் 581 — X 2 2 0 7 3 8 — 92567 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.22,080,243.60

SUPER BALL — சீட்டிழுப்பு வாரம் 2847 — சீட்டிழுப்பு திகதி 2025.06.27 — தினம் வெள்ளிக்கிழமை — 20 31 39 73 P — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 71,218,795.20

சனிதா — திகதி 27.06.2025 — வெற்றி வாரம் 5008 — 15 27 32 62 X — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 69,526,557.20 — ரூ. 50,000/- 67504

சசிரி — வெற்றி வாரம் 713 — சீட்டிழுப்பு திகதி 27.06.2025 — வெள்ளிக்கிழமை — 05 25 26 — வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ.3,386,640.00

ராசி — சீட்டிழுப்பு வாரம் 4559 — சீட்டிழுப்பு திகதி 27.06.2025 — தினம் வெள்ளிக்கிழமை — 15 17 40 50 — மேடம் — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.3,000,000.00 — 277661

கப்ருக — ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம் — I 03 44 57 58 60 — 2023 — 27.06.2025 வெள்ளிக்கிழமை — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.579,786,869.40

அட கோடிபதி ADA KOTIPATHI — வெள்ளிக்கிழமை — வெற்றி வாரம் 2673 — சீட்டிழுப்பு திகதி 2025.06.27 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.66,699,988.80 — 07 43 49 62 S — 983122


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## யாழ். மாவட்டத்தின் முதல்வராம் பிரதீபனுக்கு வாழ்த்துகள்



யாழ். மாவட்டத்தின் முதல்வனாய்
பணி செய்யும் ஒருவனாய்
பார் போற்ற உயர்ந்து நிற்கும்
பிரதீபம்; எம் பிரதீபனை
மனதார வாழ்த்தி
உளமார வணங்கி நிற்கின்றோம்.

Best Wishes

மனதார வாழ்த்தி மகிழும்
சி.ஆனந்தராஜா குடும்பம்
கோண்டாவில் சனசமூக நிலையம்,
கிராம அபிவிருத்திச் சங்கம்.

(C-3281)

## கனடா - வரி இல்லாமல் விரைவு பொதிகள் சேவை

5-9 Kg 3960/-
11-16 Kg 2790/-
21-30 Kg 2650/-

- குறைந்த விலை -நிறைந்த சேவை
- கருவாடு, மருந்து வகைகள், எண்ணெய் வகைகள் அனுப்பலாம்
- 14 நாட்களில் Delivery

UK 11Kg - 1400/- | France 11Kg - 2220/- | Germany 11Kg - 2020/-
Swiss 11Kg - 2500/- | Australia 11Kg - 1980/- | Italy 11Kg - 2260/-

எமது நேரடி கிளைகள்: கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம், சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை

V2 TRAVELS 076 822 6241 076 822 6237

## பணிப்பெண் தேவை

யாழ். நகரில் உள்ள
சிறிய குடும்பம் ஒன்றிற்கு
வீட்டில் தங்கி பணிபுரிவதற்கு
பணிப்பெண் ஒருவர் தேவை.
சம்பளம் : 30,000

077 32 76 502

(4659)

## கோழி வளர்ப்போருக்கு

இத்தாலியில் (Italy) இருந்து நேரடியாக எம்மால் இறக்குமதி செய்யப்பட்ட கோழி குஞ்சு பொரிக்கும் இயந்திரம் (Egg Incubator) ஒரே நேரத்தில் 49 கோழி முட்டைகளை அடைகாக்கும் அரை தானியங்கி இயந்திரம் இப்பொழுது எம்மிடம். அத்துடன் விரும்பிய பறவைகளின் முட்டைகளையும் பயன்படுத்தலாம். இது ஒரு இத்தாலி (Italy) நாட்டின் தயாரிப்பு

"நாங்கள் உங்களோடு"

ஆர்க் .என். கம்பனி



- 150, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 021 222 4021
- A9 வீதி, எழுதுமட்டுவாழ். 070 191 3571
- A9 வீதி, பரந்தன் சந்தி, பரந்தன். 021 228 2020

(4650)

Hotline: 071 535 7799 / 071 535 7803

## Happy Supermarket - உரும்பிராய்

| | | |
|---|---|---|
| 1Kg வெள்ளைச் சீனி | - 218/= | Max 2Kg |
| 1Kg Prima கோதுமை மா | - 158/= | |
| 1Kg சிவப்பு பருப்பு | - 254/= | |
| 1Kg மஞ்சள் பருப்பு | - 399/= | |
| 1Kg றவை | - 290/= | |
| 1Kg பொன்னி அரிசி | - 250/= | |
| 1Kg ஈக்குத்தீட்டல் பச்சை | - 215/= | |
| 1Kg தீட்டல்ப்பச்சை | - 240/= | |
| 10Kg விஜிதா | - 2800/= | |
| 1Kg மல்லி (M) | - 355/= | |
| 1Kg உளுத்தம்பருப்பு | - 759/= | |
| 1Kg சிவப்பு கௌப்பி | - 890/= | |
| 1Kg கடலை | - 385/= | |
| 1Kg சோயா | - 350/= | |
| 400g விம் கட்டி | - 250/= | ~~265/=~~ |



Max 01
400g Anchor 1040/= ~~1100/=~~



1Kg சன்லைட் பவுடர் 280/= ~~320/=~~

தரமான பொருட்களை சிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள். மேலதிக விலைக்கழிவு விபரங்களிற்கு Facebook:- happy basket.lk இனை நாடவும்

பலாலி வீதி,
உரும்பிராய் சந்தி.

(1267)

Happy Supermarket
0777 8080 30

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு 076 636 3378 | 076 097 3127

## காணி விற்பனைக்கு

சுண்டிக்குளி பழைய பூங்கா வீதியில் கொய்யாத் தோட்டம் புது வீதி சந்தியில், மாதா சொரூபம் அமைந்துள்ளதை அடுத்துள்ள ஆதனம் நெற்பரப்பு 2ம் 11.74 குளியும் அளவுடைய (2 பரப்பு) காணி விற்பனைக்கு உண்டு.


தொடர்பு : CANE-SRI LANKA (புற்றுநோயாளர் காப்பகம்)
இல.5, சபாபதிபிள்ளை வீதி, உடுவில், சுன்னாகம்.

021 224 0258, 077 077 2759

வேலை நாட்களில் காலை 9.00 மணி தொடக்கம் மாலை 4.00 மணி வரை தொடர்பு கொள்ளலாம்.

(4646)


# 1ம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர் தம்பிராஜா தர்மலிங்கம்

(ஓய்வுபெற்ற நில அளவை அத்தியட்சகர்)

ஆண்டு ஒன்று முடிந்ததுவோ உங்கள்
அன்பு முகம் நீங்கிச் சென்று
ஆனாலும் எம் மனமோ இன்னும் ஆறவில்லை
நேற்றுப் போல் இருக்குதப்பா
காலங்கள் பல கடந்தாலும்
நீங்கள் என்றும் எம் மனதில்
காவியமாய் இருப்பீர்கள்

(1266)

மஞ்சத்தடி,
இணுவில்.

என்றும் நினைவுகளுடன்
குடும்பத்தினர்

# 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னையின் மடியில்
23 . 05 . 1978



ஆண்டவனின் நிழலில்
08 . 07 . 2024

அமரர்

## மன்மதராசன் சாரதா

திதி 28.06.2025 (சனிக்கிழமை)

எங்கள் குடும்பத்தின் குல விளக்கே நீங்கள் அணைந்த நாளிலிருந்து எங்களின் வாழ்க்கை இருளடைந்து விட்டது. எங்களின் பிரகாசமான வாழ்க்கைக்கு முதல்வியாகவும் எங்கள் குடும்பத்தின் ஆணி வேராகவும் இருந்தீர்கள். உங்களை இழந்த பின்பு வேரறுந்த மரங்களாக வாடி வதங்குகின்றோம். நீங்கள் இருந்த இடத்தை நிரப்புவதற்கு இங்கு எவரும் இல்லை. இனிமேலும் வரப்போவதுமில்லை. உங்களை நினைத்து ஆறாத் துயரில் கண்ணீர் வடிக்கின்றோம். உங்களின் பெற்றோருக்கு சிறந்த மகளாகவும் உடன்பிறந்தோருக்கு உண்மையான சகோதரியாகவும் கட்டிய கணவனுக்கு அன்பான மனைவியாகவும் பிள்ளைகளுக்குப் பாசமான தாயாகவும் விளங்கிய உங்களை காலன் கவர்ந்து சென்று ஆண்டொன்று ஓடி மறைந்தது. நாங்களோ உங்களை நினைத்து மனமுடைந்து கண்ணீர் சிந்திய வண்ணம் இருக்கின்றோம். உங்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

எங்கள் துக்கத்தில் பங்கெடுத்த அனைவருக்கும் எமது நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்

(C-3279)

வெற்றி மஹால்,
ஊரெழு கிழக்கு,
வசாவிளான்.

தகவல்:கணவன்,
பிள்ளைகள், குடும்பத்தினர்
077 615 2390

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தால் [illegible] யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 28.06.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.